# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி



## மகாத்மா காந்தியின் பிறந்த நாள்

சத்தியாக்கிரகப் போராட்டத்தின் நூற்றாண்டு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சத்தியாக்கிரகப் போராட்டம் பாராளுமன்றத்தில்

அகிம்சை

சத்தியாக்கிரகம்

போராட்டம் சௌக்கியமா?



## இன்று எதிர் நோக்கும் சவால்கள்!

அக்டோபர் - 2006 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 15/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

அக்டோபர் - 2006

மலர்-38 இதழ்- 07

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)

## உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| ஜெர்மனியில் திருத்தந்தை.... | - | 02 |
| அஹிம்சவாதி அண்ணல் காந்தி | - | 04 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 05 |
| அரசியல் அரசியல் அரசியல்... | - | 07 |
| பார்த்ததும் படித்ததும்... | - | 09 |
| ஈழத்துப் பழங்குடி மக்கள் | - | 10 |
| மாதிரி | - | 13 |
| மாணவர் பக்கம் | - | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 17 |
| பிணங்களும்... பிணங்களும்... | - | 19 |
| மனக்கோலம் | - | 20 |
| அழகின் அலங்காரம் | - | 22 |
| தென்னாசிய விளையாட்டிற்கு... | - | 24 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

இம் மாத இதழ் அண்ணல் காந்தியின் உருவப்படத்தை முன் அட்டையில் தாங்கிய வண்ணம் வெளிவந்திருக்கின்றது. இம்மாதம் 2ம் திகதி அண்ணல் காந்தியின் பிறந்த நாளாக நினைவுகூரப்பட்டதோடு அகிம்சைப் போராட்டத்தை, சத்தியாக்கிரகப் போராட்டத்தை அவர் ஆரம்பித்து நூறு ஆண்டுகள் நிறைந்த நூற்றாண்டு விழாக்களும் ஆங்காங்கே நடந்தேறின. இருப்பினும் அகிம்சைப் போரட்டம், சத்தியாக்கிரகப் போராட்டம் இன்றைய நவீன காலத்திற்கு, நவீன யுத்தக் கருவிகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஆயுதப்போராட்ட யுகத்திற்குப் பொருந்துமா பொருந்தாதா என்று பட்டிமன்றம் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இத் தருணத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்தைத் தட்டிக்கேட்டு, அதை அமுல்படுத்தவேண்டிய பொறுப்பிலுள்ள பாராளுமன்றத்தில், அதுவும் யுத்தத்தால் அல்லல்படும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பப்பட வேண்டும், போக்குவரத்து சீர் செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைளை முன்வைத்து நடாத்திய சத்தியாக்கிரகப் போராட்டம் கொச்சைப் படுத்தப்பட்டிருக்கிறது என்றே கூறவேண்டியுள்ளது. அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தை அசட்டை செய்துள்ளனர். விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே சார்ந்து கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் பாராளுமன்றத்திலுள்ள துவேஷிகள் தங்கள் வழமையான வீராப்பு வசனங்களை இப்போராட்டத்திற்கு எதிராகவும் பேசியிருப்பதுதான் வேதனையாக இருக்கின்றது. யாராக இருந்தாலும், எக்கட்சியினராக இருந்தாலும் அகிம்சைப் போராட்டத்தை, சத்தியாக் கிரகப் போராட்டத்தை நடத்துகின்றதுபோது அதனை ஆதரிக்காவிட்டாலும் அதற்கு மதிப்பளிக்க வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டியுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தப் பிரயோசனமற்ற 'துவேஷ வீராப்புவாதிகள்' தான் இலங்கையின் இறைமையைப்பற்றி அண்மைக் காலத்தில் அதிகம் கர்ச்சித்தார்கள். மனிதநேயமற்றவர்கள் நாட்டின் இறைமையைப்பற்றிப் பேசுவது வேடிக்கைதான். முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதும், பின் பூசி மெழுகுவதும் இவர்கள் யாவருக்கும் கைவந்த கலை. விஷயமறிந்த வட்டாரங்கள் அதன் உண்மைத்தன்மையை அம்பலப்படுத்திய பின்புதான் இதன் ஹாசியம் நமக்குத் தெரிகிறது. நமது நாட்டு அனைத்து மொழிப் பத்திரிகைகளையும் படிக்கின்றபோது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வெளியிடும் அறிக்கைகளையும் நடந்துகொள்ளும் சாணக்கியங்களையும் பார்த்தால் இம்சை அரசன் 23ம் புலிகேசி (வடிவேலின் திரைப்படம்) யைப்பார்த்துத்தான் வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் என்பது அல்ல, நமது நாட்டுப்பத்திரிகைச் செய்திகளே போதும் என்பது புலப்படும்.

இது இப்படியிருக்க இலங்கையின் இராஜதந்திரத்திற்கே, ஏன் ஒட்டுமொத்த அரசியல் காய் நகர்த்தல்களுக்கே உலக நாடுகளில் செல்வாக்கு இல்லை என்பதை திரு. ஜயந்த தனபால ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கான போட்டியில் ஓரங்கட்டப்பட்ட விடயத்திலிருந்தே தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்தச் சிறிய நாட்டிலேயே சமாதானத்தைத் தோற்றுவிக்க அர்ப்பணிப்போடு செயல்படாதவர்கள், ஒரு சிலரின் உறுமலுக்கு சோடைபோனவர்கள், ஐக்கிய நாட்டு செயலாளர் பதவிக்கு ஆசைப்படலாமா? இவ்விடயமானது இலங்கை அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல இலங்கைப் பிரஜைகள் அனைவருக்குமே நல்ல படிப்பினையாக அமையட்டும். ஆகவே, ஒன்று படுவோம், தனி மனித சுதந்திரத்தை மதிப்போம், அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்போம், நாட்டைக் கட்டியெழுப்புவோம், நன்மதிப்புப் பெறுவோம். மறுமடலிலும் இணைய ஆசைகளுடன்

- ஆசிரியர்




## இறைவாக்கு

கனிவுடையோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள்

நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்

மத். 5:5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெர்மனியில் திருத்தந்தை ஆற்றிய உரை! இஸ்லாமியர்களின் எதிர்ப்பு !

நடந்த செப்டம்பர் மாதம் தனது சொந்த நாடான ஜெர்மனிக்கு திருப்பயணம் மேற்கொண்ட திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அங்கு பவேரியா மாநிலத்தில் தாம் பேராசிரியராகப் பணியாற்றிய ரெகன்ஸ்பூர்க் பல்கலைக் கழகத்தில் அங்குள்ள மாணவர்களுக்கு உரையாற்றினார். அவ்வுரையின் சில பகுதிகள் இஸ்லாத்தை இழிவு படுத்துவதாக உள்ளது என உலக இஸ்லாமியர் மத்தியில் எதிர்ப்பலைகள் எழுந்தன.

தீவிரவாதம் இறைவனின் இயல்புக்கு முற்றிலும் மாறுபட்டது. பயங்கரவாதம், கொலை போன்ற செயல்கள் இறைவனின் இயல்புக்கே எதிரானவை என்று கூறிய திருத்தந்தை, 14ம் நூற்றாண்டைச் சேர்ந்த பேரரசர் 2ம் மனுவேலின் கருத்தை மேற்கோள் காட்டினார். “முகமதுநபி உலகிற்கு புதிதாக எதை வழங்கியுள்ளார் என எனக்குக் காட்டுங்கள். அங்கு தீமைகளையும், மனித நேயத்திற்கு எதிரான செயல்களையும் குறிப்பாகக் கத்தி முனையில் இஸ்லாத்தைப் பரப்பும் படியான அவரது போதனையையுமே காண்பீர்கள்” என்று கூறியுள்ளார் எனக் குறிப்பிட்டார்.

விசுவாசத்தைப் பயங்கரவாதத்தின் வழியாகப் பரப்ப விரும்புவது அறிவீனம் என்ற பேரரசர் மனுவேலின் கூற்றைச் சுட்டிக் காட்டிய திருத் தந்தை, “இப்படி அறிவீனமாகச் செயல்படும் கொள்கைப் பிடிப்பு இறைவனின் இயல்புக்கு எதிரானது என்பது உலக உண்மை” என்றார்.

இந்த உரைபற்றி இஸ்லாமியர்கள் மத்தியில் அதிருப்தி தோன்றியதை அடுத்து திருத்தந்தை “எனது ரெகன்ஸ்பூர்க் உரையின் ஒரு பகுதிக்கு இஸ்லாம் உலகத்திலிருந்து கடுமையான எதிர்ப்புக்கள் இஸ்லாம் மத உணர்வுகள் புண்பட்டுள்ளதாக வெளி வருவதைக் கண்டு உண்மையிலேயே வருத்தப் படுகிறேன். இஸ்லாம் சகோதரர்களை உண்மையான திறந்த மனதுடனான உரையாடலுக்கு அழைக்கின்றேன்” என்று கூறினார்.

மேலும் “எனது உரையில் 14வது நூற்றாண்டில் வாழ்ந்த பேரரசனின் கருத்தைத்தான் சுட்டிக்காட்டினேன். இது எந்த வகையிலும் எனது சொந்தக் கருத்தாக இருக்க முடியாது. இஸ்லாமியர்கள் (புனிதப்போர்) ஜிகாத் பற்றிக் கொண்டுள்ள கருத்தைத்தான் மேற்கோள் காட்டியுள்ளேன்” என்றார் திருத்தந்தை.

இஸ்லாமியர்களின் எதிர்ப்புபற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள வத்திக்கானின் ஆட்சித்துறைச் செயலர் கர்தினால் டார்சியோ பேர்டோன் கூறுகையில்.

‘திருத்தந்தையின் உரை ஒரு முழுமையான நேர்மறைக் கண்ணோட்டத்தில் திறந்த மனதுடனும், நேர்மையுடனும், மதங்கள்’ மீதான பரஸ்பர மரியாதையுடனும் உரையாடல் மேற்கொள்ளப்பட வழங்கப்பட்ட அழைப்பாகும். திருத்தந்தை 14ம் நூற்றாண்டுப் பேரரசரின் கருத்தைப் பல்கலைக் கழகக் கல்விச் சூழ்நிலையில் மதத்திற்கும் பயங்கரவாதத்திற்குமிடையே உள்ள உறவை விளக்க ஒரு கருவியாகவே பயன்படுத்தினார். முழு உரையையும் உள்நோக்கமின்றிப் படிப்பவர்கள் திருத்தந்தையின் உரையின் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொள்வர்’ என்று கூறியுள்ளார்.

திருத்தந்தை வருத்தம் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை தணிந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. மதத்தீவிரவாதம், அது தொடர்பான வன்முறைகள் கிறிஸ்தவர்களிலும்ஒரு கால கட்டத்தில் இருந்ததுண்டு. இஸ்லாத்திலும் அது இன்றுவரை காணப்படவே செய்கிறது. இதற்கு ஒருவரை ஒருவர் குற்றச் சாட்டு வதில் பயனேதும் இல்லை. அன்பின் வடிவான கடவுள் அவரது பெயரால் வன்செய லையோ உயிர்க்கொலையையோ விரும்பமாட்டார். இது கடவுளின் இயல்புக்கு முரண்பட்டவை யாகும். இதனை விளக்கும் வகையில் அமைந்த திருத் தந்தையின் உரை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டமை துரதிர்ஷ்டவசமானதே.

திருச்சபை எப்போதும் பிறமதங்களோடு நல்லுறவு கொள்ளவும், திறந்த மனதோடு உரையாடவும் விரும்புகிறது. ஒவ்வொரு மதத்திலும் இறை வெளிப்பாடு உள்ளது என நம்பு கிறது. அதனை மதிக்கவும் செய்கிறது. ஆகவே மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் ஏற் படும் வன்முறைகளை, குரோத உணர்வுகளை விடுத்து ஒரே இறைவனின் பிள்ளைகளாக அன்புடைச் சமுதாயம் காண்பதே காலத்தின் தேவையாகும்.

இறைவனை நோக்கிய பாதையில் அர்ப்பணப் பூவாக துறவற வாழ்வில் பயணித்து இவ்வாண்டு மார்கழி 18ம் நாளுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்து மற்றுமொரு அரை நூற்றாண்டிற்குள் கால்பதிக்கும் திருக்குடும்ப சபையின் பாலையூற்று மடத்துத் தலைவியான அருட்சகோ. மேரி பெலிசியாவின் பொன் விழாவினையொட்டி பாராட்டு வைபவம் 07.09.2006 அன்று பாலையூற்று அனா நிலைய உள்ளகக் கலையரங்கில் சிறப்புடன் நடைபெற்றது.


அன்றைய தினம் மு.ப. 11.00 மணியளவில் கன்னியர் மட நுழைவாயில் முன்றலில் இருந்து மலர்மாலை அணிவித்து சம்பிரதாய பூர்வ நிகழ்வுகளோடு வரவேற்கப்பட்ட ஜூபிலி நாயகியை ஆர்ப்பரித்த ஆலயமணியின் ஓசையுடன் ஆயர், குருக்கள், துறவற சபையோர், பக்திச் சபையினர், பங்குச் சமூகமும் புடை சூழஆலயம் நோக்கி பவனியாக அழைத்து வந்தனர்.

கிறிஸ்துவின் பிரசன்ன பலிபீடத்தில் பொன் விழாக்காணும் அருட்சகோ. மேரி பெலிசியாவின் நலன் வேண்டல் நன்றித் திருப்பலி ஆயர் மேதகு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து விழா நாயகியுடன் அனா நிலையத்தில் ஒன்று கூடியவர்கள் முன்னிலையில் அருட்சகோதரியின் வாழ்வும் பணியும், நன்மைத்தனம், சிறப்புத்தன்மைகள்பற்றி ஆயர், குருக்கள், பொது நிலையினரெனப் பலரும் கவிதைகளாக, உரையாக வழங்கி பாராட்டு மழை பொழிந்தனர். 'பாலையூற்று அன்னைதிரேசா' என்ற புகழாரத்தினால் எழுந்த கரகோசத்தின் மத்தியில் நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்துத் தரப்பினராலும் அன்பளிப்புக்கள், நினைவுச் சின்னங்கள் பரிசாக வழங்கி கௌரவிக்கப்பட்டது. விழாநாயகிசார்ந்த சபையின் விழாக் குழுவினால் ஐக்கிய மதிய போசன விருந்தும் வழங்க அன்றைய பொன்விழா நிகழ்வுகள் மகிழ்வின் உச்சவிழாவாக அரங்கேறின.

**அர்ப்பண வாழ்வில்**
**பொன்விழாக் காணும்**
அருட்சகோ. மேரி பெலிசியா தி.கு.
**18.12.1956 – 18.12.2006**

## எதிர்பார்க்கிறோம்! எழுதுங்கள்!



எழுத்தாளர்களே! படைப்பாளிகளே!

உங்கள் ஆக்கங்களைத் தாங்கிவர தொண்டன் ஆவலோடு காத்திருக்கிறான். கருத்துள்ள கட்டுரைகள், கதைகள், கவிதைகள், விமர்சனங்கள், துணுக்குகள்.... எந்த வடிவத்திலும் அமையலாம். சுருக்கமாக சுவையாக எழுதுங்கள். சொந்தப் பெயர், முகவரி தவறாது குறிப்பிடப் படவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சாவாதி அண்ணல் காந்தி



அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் இந்திய நாட்டுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தவர் மகாத்மா காந்தி. அவரது பிறந்த தினம் இம்மாதம் (ஒக்டோபர்) 2ம் திகதி கொண்டாடப்பட்டது. இது காந்தியின் 137வது பிறந்த தினமாகும். அவர் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்திய தேசத்தின் தந்தை என்று போற்றப்படும் காந்தி 1869ம் ஆண்டு ஐப்பசி மாதம் இரண்டாம் திகதி குஜாரத் மாநிலத்தில் உள்ள போர்பந்தர் என்னுமிடத்தில் பிறந்தார். சத்திய அரிச்சந்திரன் என்னும் நாடகத்தைப்பார்த்து சத்தியத்தின் மீது பற்றுக்கொண்ட இவர் இறுதிவரை சத்திய சீலராக வாழ்ந்தார்.


இங்கிலாந்தில் உயர் கல்வி கற்று பாரிஸ்டர் பட்டம் பெற்ற காந்தி அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டு இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்; பல முறை சிறைசென்றவர். சிறையில் வைத்தே 'சத்திய சோதனை' என்னும் தமது சுயசரிதையை எழுதினார். காந்தி உள்ளிட்ட பல தலைவர்களின் தீவிர போராட்டத்தின் விளைவாக 1947ம் ஆண்டு ஆவணிமாதம் 15ம் திகதி இந்தியா சுதந்திரம் பெற்றது.

இயேசுவின் போதனைகளில் மிகவும் பற்றுக் கொண்டிருந்த காந்தி அடிகள் தமது எளிய வாழ்வாலும், சத்தியத்தின் மீது கொண்ட உறுதியான பிடிப்பினாலும் இந்திய மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் ஆற்றிய மாபெரும் தொண்டினாலும் மக்கள் மனங்களில் நீடித்துவாழ்கிறார். அவர் உருவாக்கிய 'சத்தியாக்கிரகம்' என்னும் அஹிம்சைப் போராட்டம் ஆயுதங்கள் பெருத்துவிட்ட இன்றைய உலகிலும் சக்தி மிக்க மக்கள் போராட்ட வடிவமாக விளங்குகிறது.

## காந்தி சொன்னார்...

குண்டுகளை வீசுவதில் பலர் மகிழ்வதாகத்தெரிகிறது. ஆங்கிலேயரை அழிப்பவர்கள் ஆங்கிலேயர் போய்விட்டபிறகு இந்தியர்கள் மீதும் குண்டு வீசுவார்கள். பிரான்சின் குடியரசுத் தலைவரைக் கொன்றவன் பிரெஞ்சுக்காரனே. அமெரிக்காவின் தலைவரான கிளிவ்லன்டைக் கொன்றவனும் அமெரிக்கனே. ஆகையால் நாம் அவசரப்பட்டு ஆலோசியாமல் மேலை நாடுகளைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றாதிருந்தால் நலம்.

காந்தியின் வார்த்தைகள் எவ்வளவு உண்மை என்பதற்கு அவரது மரணமே சான்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




#### விசுவாச வாழ்வுக்குக் கிறிஸ்தவர்களாகிய எமக்கு அழைப்பு

மார்ட்டின் லூதர்கிங் போன்றவர்கள் மனிதரிடையே திருமுழுக்கின் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகத் தமது வாழ்வை அர்ப்பணிக்கின்றனர்.

நாமனைவரும் இறையரசைப் பரப்பும் பொறுப்பான பணிக்குக் கட்டுப்பட்டுள்ளோம். இறைவனின் விசேட அழைப்புக்கேற்ப தமது கடமைகளை நிறைவேற்றிச் சிறப்பெய்திய பலரைப்பற்றிப் புதிய உடன்படிக்கையிலிருந்து நாம் அறியாலாம்.

#### பொறுப்பை நிறைவேற்றிய உத்தமி மரியா

சுவக்கீனுக்கும் அன்னம்மாளுக்கும் அன்று நசரேத்து என்னும் கிராமத்தில் மகளாக மரியா பிறந்தாள். இறைவன் அவரை அழைத்த விதம் அதிசயமானது.

மரியா, அஞ்சவேண்டாம். நீர் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் . அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்

லூக்கா 1: 30,31

மரியா பயந்து சற்றுப் பின் வாங்கினார் . ஆனால் தேவதூதர் அவரைத் தைரியம் பெறும்படி செய்தார். "தூய ஆவி உம்மீது வரும் உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்"

லூக்கா 1:35

அச்சம் நீங்கித் தன் அதிசயமான வெளிப்பாட்டைச் செய்தாள் மரியா, " நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார்.

லூக்கா 1: 38

இதிலிருந்து மரியா இறைசித்தத்துக்குக் கீழ்படிந்து இறைதிட்டத்தை தாழ்வுடன் ஏற்றார் என அறிவோம். இப் பொறுப்பு மிகப்பாரியது என்றாலும், அவர் இறை வல்லமையின் மேல் தன் முழு நம்பிக்கையையும் வைத்தார். ஏழ்மையான இதயங்கொண்ட அவர் தம்பொறுப்பை மிக உன்னதமான முறையில் நிறைவேற்றினார்

இறைவனின் வாக்குறுதியில் முழுமையான விசுவாசம் வைத்துச் செயற்படும்போது, மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்ட மேலான ஒரு சக்தியை விசுவாசிகள் பெறுவர்.

இறைவிசுவாசத்தில் வாழும் போதும், செயற்படும்போதும் பல புதுமைகள் நடைபெறும். மரியாவின் விடயத்திலும் கூட இறைவனால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை என்ற உண்மை அவரது உள்ளத்தில் எதிரொலித்தது.

இவரது இச் செயற்பாட்டினூடாக நாம் அழைப்பு என்பது நினையாத நேரத்தில், எதிர்பாராத விதத்தில் எமக்கு வரக்கூடும் என்பதையறிகிறோம்.

#### மனித உழைப்பின் உன்னத அடையாளம் புனித சூசையப்பர்

தச்சுத்தொழிலை மேற்கொண்டு சிரமத்துடன் குடும்பத்தை நடத்தினார். இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகவும், மரியாவின் கணவராகவும் இருந்து திருக்குடும்பத்தைப் பொறுப்புடன் கவனித்துப் பராமரித்தார். தொழிலை இறைவனுக்கு ஏற்றதாகச் செய்தார். இயேசுவின் போதனைகளைக் கேட்ட மக்கள் "இவர் தச்சனான சூசையின் மகன் அல்லவா?" என்றனர்.

உழைப்பு உன்னதமான செயல். அது இறைவனால் எமக்களிக்கப்பட்ட மாபெரும் ஆற்றல். மக்களுக்காகவும் , நாட்டுக்காகவும் உழைப்பதால் இறைவனின் படைப்பைப் பூரணப்படுத்துகிறோம். உற்பத்தியையும், வியாபாரத்தையும், சேவைகளையும் வழங்கும் போது மனித உழைப்பு ஏனைய பௌதிக வளங்களையும் விட மேம்பட்டதாக உள்ளது. தன் குடும்பத்தை நடத்தவும், இறை திட்டத்தைப் பூர்த்திசெய்யவும் மனிதன் தன் சக்தியைப் பயன்படுத்திப் பங்காளியாகிறான்.

மனித உழைப்பைப் பற்றிக் கவனிக்க வேண்டிய விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மனித உழைப்பு பௌதிகப் பொருட்களைவிட மதிப்பானது
2. மனித உழைப்புக்கு ஏற்ற கூலியைக் கொடுக்க வேண்டும்.
3. உழைப்பைச் சூறையாடல் பாரதூரமான குற்றமாகும்.
4. உழைப்பாளிகள் எனும்போது ஆண், பெண் வேறுபாடும்,வயதெல்லையும் கருத்தில் கொள்ளப்படவேண்டும்
5. உழைப்பவர் தம் உரிமைகளைப் பெற, அகிம்சை வழிகளில் ஈடுபடுதல் நியாயமானது.
6. உழைப்பாளிகளுக்கு விடுமுறை, ஓய்வு ஆகியவை வழங்கப்பட்டு அவர்களது உடல் நலம் காக்கப்படவேண்டும்.

**திருச்சபையில் மேய்ப்புப் பணித் தலைமைத்துவம்:**

கலிலேயாக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஒரு மனிதர் பேதுரு. இயேசுவைத் சந்தித்தமை அவரது வாழ்வில் விசேட சம்பவமானது. மனிதரைப் பிடிப்பதற்காக இயேசுவிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்தது.

"அஞ்சாதே : இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்"

லூர்க்கா 5:10

எனவே, பேதுரு எல்லாவற்றையும் துறந்து இயேசுவைப் பின் சென்றார்

தனது உயிர்ப்பின் பின் ஏழு சீடர்களுக்கு மும்முறை காட்சியளித்து அவர்களோடு உண்ட பின் சீமோன் பேதுருவை நோக்கி "யோவானின் மகன் சீமோனே , நீ இவர்களை விட மிகுதியாக என் மீது அன்பு செலுத்துகிறாயா? 'எனக்கேட்க, " ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டென உமக்குத் தெரியுமே" என்றார். என் ஆடுகளைப் பேணி வளர்

யோவான் 21:15-17

பெந்தக்கோஸ்து தினத்தன்று செனக் கொலு மண்டபத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின் திருச்சபை முழுஉலகிலும் பரவியது. பேதுரு தூயஆவியின் வரத்தால் மக்களுக்குப் போதித்தார். இதனால் ஏராளமானோர் கிறிஸ்துவைப் பின்பற்றினார்கள். பூரண அர்ப் பணிப்பு, நேர்மை, சுறுசுறுப்பு போன்ற குணங்களைக் கொண்ட பேதுரு பிரச்சனைகளின் போது நேர்மையான தலைவனாக இறைவனுள் வாழ்ந்து தீர்மானங்களையெடுத்தார்.

திருச்சபையின் முதலாவது தலைவராகக் கணிக்கப்படும் பேதுரு தனது வாழ்வைக் கூடப் பொருட்படுத்தாது மறைபரப்புச் சேவையை ஆற்றினார். தம் வாழ்வையே இயேசுவுக்காக சிலுவையில் அறையுண்டு அர்ப்பணித்தார்.

இவரது ஆர்வம், துணிவு என்பன திருச்சபையைக் கட்டியெழுப்பத் துணைபுரிந்தன. இவற்றை மனதிற்கொண்டு கிறிஸ்தவராக நாமும் இறையரசைப் பரப்பக் கடமைப்பட்டுள்ளோம்..

**பாடசாலை மாணவரின் அர்ப்பண வாழ்வு**

பாடசாலையிலும், குடும்பத்திலும் பல சந்தர்ப்பங்கள் எமக்கு வாய்ப்பாகக் கிடைக்கும் அவை:

1. குடும்பச் செபவாழ்வுக்குப் புத்துயிர் அளித்தல்
2. குடும்பத்தினுள் அன்பின் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்
3. குடும்பத்தவருக்கு உதவி தேவைப்படுகையில் மகிழ்ச்சியுடன் அதைச் செய்ய முன்வருதல்
4. பாடசாலையினுள் சகமாணவருடன் அன்புடனும், சமாதானத்துடன் நெருங்கி வாழ முயற்சி செய்தல்.
5. பாடசாலையில் சமய நிகழ்ச்சிகளில் முன்னின்று செயற்படுதல்
6. பாடசாலையில் சமயம் சார் சபைகளில், கழகங் களில் அங்கத்தவராக இணைந்து முன்னின்று செயற்படுதல்.

எமது வழ்வில் கஷ்டம், துன்பம், வேதனை போன்ற சவால்களுக்கு மத்தியில் இறைசித்தத்திற்கு இடமளித்து எம்மால் இயன்றளவு உழைத்து இறைவனில் வாழுதல், தூய ஆவியின் சக்தியி னூடாக அவற்றையனுபவித்து வாழச் செபிக்க வேண்டும்.

தேவதாயின் வழியாக இயேசுவிடம் செல்ல பக்தியுடன் வாழ்ந்து, தேவதாயைக் கனம் பண்ணுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும் இலங்கையின் இனப்பிரச்சனையும்

1983 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வருகிறது. பேச்சு வார்த்தை மூலம் ஒரு தீர்வினை உருவாக்குவதற்கு இந்தியா மத்தியஸ்தம் வகித்தது மட்டுமல்லாமல் இனப்பிரச்சனையோடு பல்வேறு விதமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டும் செயலாற்றியது.


அதே வேளை இலங்கை அரசுத் தலைவர்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்குமிடையே காலத்திற்குக் காலம் நடந்த பேச்சு வார்த்தைகள் பயனற்றுப் போனமையும், இலங்கை தானாக இனப்பிரச்சனையைத் தீர்த்துக் கொள்வதற்கான முன் முயற்சிகளைக்கூட ஒரு போதும் மேற்கொள்ளாத நிலையில் இழுத்தடிப்புக்களைச் செய்து வந்தமையும் 1983 ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழ்மக்களுக்கெதிரான உச்சக்கட்ட வன்முறைகள் வெளிப்பட்டுத் தோன்றிய நிலையிலும், மொத்தத்தில் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அதிகரித்துக் கொண்டிருந்த நிலையிலும்தான் இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு என்றதொரு போர்வையில் தனது சொந்த நலனைக்கருதி இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஒன்றை அவசர அவசரமாக உருவாக்கியது. ஆனால் இந்தியா தான் முன்னின்று உருவாக்கிய ஒப்பந்தத்தையே அரைகுறையாக விட்டு விட்டுப் பின்வாங்கியது மிகவும் கவலைக்குரியதாகும்.






இந்தியா உருவாக்கிய இவ்வொப்பந்தத்தில் உள்ளடக்கிய விடயங்கள் தொடர்பாகப் பல்வேறு சந்தேகங்களும் ஏற்க முடியாத அம்சங்களும் இருந்த போதிலும் கூட இவ்வொப்பந்தத்தின் ஊடாக எதிர்காலத்தில் ஒரு நிரந்தரத்தீர்வு கிடைக்குமென நம்பிய தமிழ் பேசும் மக்களும், இவ்வொப்பந்தத்தின் வெற்றிக்காக இந்தியாவின் நல்லெண்ணெத்தை நம்பி, ஒத்தாசை புரிந்த போரட்ட அணிகளும் ஏனைய ஜனநாயக சக்திகளும், தனி மனிதர்களும் கூட பெரும் பாதிப்புக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியாவின் இச் செயல், இந்தியாவின் பொறுப்புணர்ச்சி தொடர்பாக பல்வேறு சந்தேகங்களும், நம்பிக்கையீனங்களும் தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த புலிகளைத் தவிர ஏனைய கட்சிகள், குழுக்களின் ஆதரவை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட இந்திய அரசாங்கம் பின்னர் ஒரு கட்டத்தில், புலிகளைக் கடுமையாகப் பகைத்ததுடன், அவர்களை மட்டும் காரணங்காட்டிக் கொண்டு, இலங்கைத்தமிழர் விவகாரத்திலிருந்து பின்வாங்கியமை பெரிதும் வேதனைப்பட வேண்டிய சம்பவமாகும்.

இலங்கையின் இனப்பிரச்சனை என்பது இந்தியாவின் நலன்களுடன் தொடர்புபட்ட விடயமாகும். இலங்கையில் யுத்தம் நிகழும் வரை, அதனால் ஏற்படும் சகலவிதமான புறவினைகளும் இந்தியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் இலங்கையிலும், இந்தியாவிலும் மட்டுமல்லாமல் தெற்காசியாவிலேயே இந்தியாவின் நலன்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாது. ஆகவே இனப்பிரச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையைத் தீர்ப்பதன் மூலமாக மட்டுமே இலங்கை வாழ் மக்களி னதும் இந்தியாவினதும் நலன்க ளைப் பாதுகாக்க முடியும். பண் டாரநாயக்கா முதல் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரையிலும், இலங்கையின் இனப்பிரச்சனையை அதன் எல்லைக்குள்ளேயே தீர்த்துக் கொள்வதற்கான அரசியல் வளர்ச்சி, பொறிமுறைகள், பக்குவம் கொண்ட தலைவர் களாக உருவாகாமல் போனது துரதிஷ்டவசமான நிலைமை யாகும். S.W.R.D. பண்டார நாயக்கா, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, திரு. ஜெய வர்த்தனா, திரு ஆர்.பிரேமதாஸ போன்ற விவேகமுள்ள தலை வர்கள் இலங்கையை அரசாட்சி செய்துள்ளனர். இருந்த போதும் அவர்கள் பக்கம் சாரும் இன வாதத் தலைவர்களாகவே செயற்பட்டுள்ளனர். இதனால் இனப்பிரச்சனைக்கு நீதியான ஒரு தீர்வை வழங்குவதில் தேசிய அரசியல் கட்சிகளையும், பெரும் பான்மை மக்களையும் ஒருமைப் படுத்துவதில் தமக்குக் கிடைத்த அரும்பெரும் சந்தர்ப்பங்களை யெல்லாம் வேண்டுமென்றே நழுவ விட்டுள்ளனர். எனவே இலங் கையின் இனப்பிரச்சனையை, தீர்ப்பதற்கு இலங்கைக்குள்ளேயே ஓர் அரசியல் பக்குவம் காணப் படவில்லை என்பது உலக நாடுகள் இன்று கண்கூடாகக் கண்டுள்ள உண்மையாகும். காலங்கடந்த இந்நிலையிலும் இலங்கையின் இரு பிரதான அரசியற்கட்சிகள் ஒரு பொது வேலைத் திட்டத்திற்காக ஒன்றி ணைந்து செயற்படுவதாகக் கூறி, தேசிய இனப்பிரச்சனைத் தீர்வை நோக்கி நாட்டைச் செலுத்த முன் வந்திருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால் அது வெறும் காலங்கடத்தலாகவும், வெறும் வார்த்தை ஜாலங்களா கவும் மாறிவிடக்கூடாது.

எவ்வறாயினும் சர்வதேச மத்தியஸ்தம், போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழு, நோர்வேயின் அனுசரணை, இணைத்தலை மை நாடுகள் என்றவாறான அணுகுமுறைகளினூடாக சர்வதேச அரங்கின் தீர்க்கமான இடத்தில் இலங்கை இனப் பிரச்சனை இன்று உள்ளது. இந்நிலையில் உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடும் தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியின் அவசியத்தைத் தன்னுடன் கொண்டதுமான இந்தியா, இலங்கை, விவகாரத்தைத் தொடர்ந்தும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எவ்வா றான வெளிச்சக்திகளாக இருந் தாலும் இன்றைய நிர்க்கதியான சூழ் நிலையில் இருக்கும் தமிழர்க ளுக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுக்கும் வரலாற்றுக் கடமை யும், தார்மீகப் பொறுப்பும் இந்தியாவுக்கே உண்டு. இல்லை யேல் அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தலையீடுகள், இன்றைய சிக்கலான நிலை மையை மேலும் நீடிக்கச் செய் வதாக அமையும். ஆகையால் இலங்கை விவகாரத்தில் இந்தியா விரைந்து செயலாற்ற வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது.

**இந்தியாவுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சனையுடன் தொடர்பு கொண்ட வரலாற்றுக்கடமை:**

இந்தியாவின் தென் மாநிலமான தமிழ்நாட்டிற்கும் இலங்கைத் தமிழருக்குமிடையே தொப்புள்க் கொடி உறவு உண்டு என்று கலைஞர் கருணாநிதியே கூறியுள்ளார். இந்நிலையில் கலைஞர் கருணாநிதிக்கு இலங்கைத் தமிழர்க்குத் தீர்வை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டில் முக்கிய பாத்திரத்தை ஏற்றுக் கொள்வதே அவருக்குள்ள வரலாற்று கடமை யாகும் என தமிழ்நாட்டில் குரல் எழுப்பப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களின் விடு தலைப்போரட்டத்தில் தமிழக முதல்வரின் பங்கு எப்பொழுதும் மகத்தானதாக இருக்க வேண் டியது ஓர் அவசியத் தேவையாகும். முன்னெப்பொழுதும் இல்லாத வாறு தமிழகமுதல்வர் கருணா நிதிக்கு மத்திய அரசில் அளவு கடந்த செல்வாக்குள்ளது. காங் கிரஸ் தலைமையிலான கூட்ட மைப்பின் மதிப்பு மிக்க மூத்த தலைவராக அவர் விளங்குகிறார். தமிழக மக்களும் என்றுமில்லாத வாறு தமிழீழப் போரட்டத்திற்கு ஆதரவாக அணிதிரண்டுள்ளனர். இப்போது இல்லையேல் எப்போ தும் இல்லையென்ற நிலை பிறந் துள்ளது. எனவே இந்தப் வாய்ப்பி னையும் காலம் அளித்துள்ள இந்தப் பதவியினையும் பயன் படுத்திக் கொண்டு வரலாறு அளித்துள்ள கடமையினைச் செய்ய முன்வரவேண்டு மென்று கலைஞர் கருணாநிதியிடம் உலகத்தமிழர் சார்பாக வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.


தற்பொழுது முதல்வராக உள்ள கருணாநிதி ஈழத்தமிழர்க ளுக்காக எத்தகைய அழுத்தங் களை இந்திய மத்திய அரசுக்குக் கொடுக்கப்போகிறார்? நீதியான, ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைப் பெற எவ்வகையில் நிர்ப்பந்தங் களைக் கொடுக்கப்போகிறார் என்பதை ஈழத்தமிழரும் உலகத் தமிழரும் ஆவலுடன் எதிர்பார்த்து ள்ளனர்.

-சகாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்ததும் படித்ததும்




**நீ**ர் கொழும்புப் பிரதேசத்தில் சிங்களக் குடும்பத்தில் பிறந்து தற்பொழுது பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் சிங்கள மாணவன் ஒருவன் திடீரென தான் ஆண்பிள்ளை இல்லை. யாழ்ப்பாணத்தில் பிறந்து விமானக் குண்டு வீச்சின் மூலம் இறந்துபோன தமிழ்ப் பெண்ணாகிய இராஜகுமாரி என்று தமிழிலே கூறியிருப்பது பல்வேறு ஆச்சரியங்களையும் பல்வேறு மட்டத்தினரிடையே ஏற்படுத்தியிருக்கின்றது. காரணம் அந்தப் பையனுடைய தந்தையும் தாயும் சிங்களவர்கள். அவனும் சிங்களப் பாடசாலையிலேயே படித்து வருகின்றான். இந்நிலையில் இவ்வளவு காலமும் அவனுக்குத் தமிழே தெரியது. ஆனால் தற்பொழுது அழகு தமிழில் பேசி, தன் முற்பிறவி பற்றி விரிவாகத், தெளிவாகக் கூறியிருக்கின்றான். அவனது கூற்றுப்படி தன்னுடைய முற்பிறவித் தந்தையும் யாழ்ப்பாணத்தில் யுத்தத்தில் இறந்து விட்டதாகவும், தாயார் இன்னும் எங்கோ உயிருடன் இருப்பதாகவும் அறிய முடிகிறது. இப்பொழுது அந்தப் பையன் உளநல சிகிச்சைகள் பெற்றுக் கொண்டிருக்கின்றான். இனிவரும் காலங்களில் பல உண்மைகள் புலப்படும்.

ஆதாரம் - Daily Mirror 02/10/2006

**அ**ண்மையில் பிரேசில் நாட்டில் ஏற்பட்ட விமான அனர்த்தம் பல்வேறு செய்தி ஊடகங்கள் மூலமாக உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. பிரேசிலில் உள்ள அமேசன் காட்டுப் பகுதியில் பிரயாணித்துக் கொண்டிருந்த **Boing 747** என்ற பயணிகள் விமானம் இன்னுமொரு இலகு ரக ஜெட் விமானத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியிருக்கின்றது. அதில் பயணம் செய்த 42 பயணிகளும் மரணமாகியிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. இதில் விசேடம் என்னவென்றால் பிரேசிலில் இது வரையில் இவ்வளவு பெரியதொரு விபத்து இடம் பெற்றிருக்கவில்லை என்பதுதான். அதனால் பிரேசிலில் தொடர்ந்து மூன்று நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. உலகில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இதனை ஒரு பெரிய அனர்த்தமாகவோ விபத்தாகவோ கணிக்க முடியாது. காரணம், ஈராக், இலங்கை, சோமாலியா, இந்தோனேஷியா, சேர்பியா போன்ற நாடுகளில் நாளாந்தம் மக்கள் நூற்றுக் கணக்கில் அனர்த்தங்கள், விபத்துக்கள் மூலம் இறப்பதை அறியக் கூடியதாகவிருக்கின்றது. எனினும் பிரேசிலின் அதிபர் அந்நாட்டுமக்கள் மீது அளப்பரிய கரிசனை காட்டுவதை இச் சம்பவத்தின் வாயிலாகக் காண முடிகின்றது. இவரை முன்மாதிரியாகக் கொண்டு பல்வேறு நாடுகளின் தலைவர்களும் தம்மக்கள் மீது அன்பு செலுத்தி அவர்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்பது சகலருக்கும் ஒரு பாடமாக அமைந்து விடுகின்றது.

ஆதாரம்: பல்வேறு ஊடகங்கள்.....

- ஜோனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்துப் பழங்குடி மக்கள்

தமிழ்மொழி ஒரு கிளை மொழியாக, ஈழத்தில் செழித்து வளர்ந்த பகுதிகளில் மட்டக்களப்புத் தமிழகமும் ஒன்று. இப்பிரதேசம் இன்றைய அம்பாறை (பட்டிப்பளை)ப் பிரதேசத்தையும் அடக்கியதாய் நானில வளமும் நிறைந்து இன்னுமொரு பழந் தமிழகமாகவே காட்சி தருகின்றது.

இம்மண்ணின் சொந்தக்காரர்களான பழங் குடிமக்களுடன் (இயக்கர், நாகர், வேடர்) காலத்திற்குக் காலம் இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய பல்வேறு இனக்குழுமங்கள் (கலிங்கர், மலையாளிகள், முதலானோர்) ஒன்று கலந்து இம் மண்ணின் செழிப் பிற்கும் மொழியின் வளர்ச்சிக்கும் அளப்பரிய பணியாற்றி யுள்ளமை ஒரு பெரும் வரலாற்று உண்மையாகும்.

இவ்விரு இனத்தவரில் கலிங்கர் (கலிங்கம் என்பது இந்தியாவின் இன்றைய ஒரிசா மாநிலமாகும்). ஒரு காலம் திராவிட மொழி பேசிய மக்கள் என்பர். மலையாளம் (கேரளா) என்பது பழந்தமிழகத்தின் (கிமு.500 - கி.மு.200) முப்பெரும் பிரிவுகளில் ஒன்றான சேர நாடாகும். கி.பி. 10ம் நூற்றாண்டில் தமிழில் எழுந்த 'புறப்பொருள் வெண்பா மாலை' எனும் நூலின் ஆசிரியர் ஜயனாரிதனார் இம் மண்ணின் (மலையாளம்) மைந்தராவார். இதிலிருந்து தமிழ்மொழி 1000 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு தலைநிமிர்ந்து நின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

இலங்கைத்தீவின் ஆதிவாசிகள் எனச் சொல்லப்படும் நாகர், இயக்கர், வேடர் எனும் குழுமங்களில் நாகர் குறித்து எழுதுவோர் அம் மக்களைப் பாம்பு வணக்கத்தோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதையே ஒரு மரபாகக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இம்மனப்பான்மைக்கு நாகம் எனும் சொல்லுக்குப் பாம்பு எனும் பொருள் இருப்பதும் இன்று கூடத் தமிழர் மத்தியில் நாகதம்பிரான் வழிபாடு நிலவுவதும் உரிய காரணங்களாகக் கொள்ளப்படலாம். ஆனால் நாகம் எனும் சொல்லுக்கு மலை எனும் பொருள் இருப்பதனையும் அதனை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழகத்தில் குறிஞ்சி என ஒரு நிலம் வகுக்கப்ப ட்டிருந்தமையையும் அவ்வறிஞர்கள் மறந்து விட்டமை ஆச்சரியத்தைத் தருகின்றது.

கடைச்சங்க காலத்திற்கு (கி.மு.500- கி.மு.200) முன்பு தோற்றம் பெற்ற நூலெனக் கருதப்படும் தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல் அன்றையத் தமிழகத்து நிலங்களை இவ்விதம் வரையறை செய்கின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

*(தொல்- பொருளதிகாரம்)*

தொல்காப்பியரின் இந்த வரையறையின் படி நாகர் எனும் இனக்குழுவினரை குறிஞ்சி நிலத்தோராகக் கொள்ளுதலே சரியானதும் பழந்தமிழர் வாழ்க்கை முறைக்கு ஏற்றதுமாகும். குறிஞ்சி நிலத்தவரைக் குறவர் எனச்சொல்லுதல் வழக்கம். எனினும் இச்சொல் (குறவர்) குன்றவர் எனும் சொல்லின் திரிபு ஆகும். குன்றவர் என்பது மலையக மக்களையே குறிக்கும்.

மேலும், நாகர் மட்டுமன்றி, இயக்கர் எனும் அரக்கர் அசுரர் வம்சத்தவரென்றும் அவ்வம்சம் அஹி (பாம்பு) எனும் சாதியைச் சார்ந்தது என்றும் கொள்வதற்கு இருக்கு வேதத்தில் சான்றுகள் உள என்னும்பண்டிதர் வீ.சீ. கந்தையா அவர்களின் கூற்றும் (மட்டக்களப்புத் தமிழகம் பக். 393) பழங்காலத்துப் பாம்பு வழிபாடு எல்லா இனக் குழுமங்களிடையேயும் மேலோங்கியுள்ள மையையே காட்டுகின்றது.

புகழ் பெற்ற இன்னுமொரு தமிழறிஞரான மறைமலை அடிகள் சுரர், தேவர் என்றும் அசுரர் தமிழர் என்றும் குறிப்பிடுவார். (தமிழர் மதம்- பக். 179) இக்கருத்தின் அடிப்படையிலேயே பாவேந்தர் பாரதிதாசன் இயக்கர் கோன் இராவணனை **'அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்'** என்று உரத்த குரலில் பாடினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் TAMIL LEXICAN_PART_I (பக்: 123) கலித்தொகை 95ம் பாடல் உரையைக் காட்டி இயக்கர் என்னும் சொல்லுக்குத் தலைமை ஏற்று நடத்துபவர் என்று பொருள் தந்திருப்பதும் நமது அவதானத்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர் எனும் இனக்குழுவினரை (இம் மக்களை முண்டர் அல்லது அவுஸ்திரலொயிட் என்பர்) பலரும் நாகரிகமற்றவர் என்றே கருதுவர். ஆனால் இவர்கள் நாகர் (குறிஞ்சி நில மக்கள்) போல பழந்தமிழகத்து நிலங்களில் ஒன்றான முல்லை (காடும் காடு சார்ந்ததும்) நில மக்களாவார். இம்மக்களுக்கு (ஆடவருக்கு) அன்று கொடுக்கப்பட்ட திணைப்பெயர் ஆயர், வேடர் என்பனவாகும். இதனைத் தொல்காப்பியம் தெளிவாகக் கூறுகின்றது.

"ஆயர் வேட்டுவர் ஆடூஉத்திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே
ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை
ஆனா வகைய திணை நிலப் பெயரே"
*(தொல். பொருளதிகாரம்)*

இப்பழங்குடிமக்களில் இயக்கர், நாகர் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலும் வேடர் விந்தனை மற்றும் மத்திய பகுதிக் காடுகளில் வாழ்ந்திருந்தாலும் இம்மூவினமக்களும் ஏதோ ஒரு வழியில் தமக்குள் ஒன்று கலந்திருப்பார்கள் என்று நாம் ஊகிக்கலாம். இதனை அறிஞர் கே.ஏ. ஆர். கென்னடியின் பின்வரும் கூற்று உறுதி செய்கின்றது. இலங்கையின், ஆதிவாசிகள் என்று கருதப்படும் வேடர்களுக்கும் தென்னிந்தியாவும் இலங்கையும் ஒன்றாக இணைந்திருந்த காலத்தில் வாழ்ந்த பழங்கற்கால மக்களுக்குமிடையே, அவர்களின் எலும்புக் கூடுகளின் அமைப்புகளில் இருந்து நெருங்கிய உடல்ரீதியான தொடர்பு கண்டறியப் பட்டுள்ளது. (தென் இந்திய, இலங்கைவாழ் பழங்கற்காலக் கட்டுமானங் களில் ஆதிமனித உடல் அமைப்பு - பக். 34)

இவ்வாதித்திராவிடர்களில் (PROTO- DRAVIDIANS) நாகர் சமூகத்தினர் உள் நாட்டில் மட்டுமன்றி வெளி நாட்டிலும் (வாணிபத்தில்) சிறப்புற்று விளங்கினர் என்பதற்கு யாழ்ப்பாணம் கந்தரோடையில் கண்டெடுக் கப்பட்ட நாக நாணயம், நாகலிங்கம் என்பன சான்றாக அமைவன. (செ. கிருஷ்ணராசாவின் இலங்கை வரலாறு பாகம்: 1.பக்-10)

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிந்துவெளி (ஹரப்பா, மொஹஞ்சதாரோ) மக்கள் ஈழத்தின் மன்னார்க் குடாவில் விளைந்த முத்துக்களைப் பெற்று மகிழ்ந்தனர் எனத் தெரிவிக்கும் தொல்லியல் சான்றுகள் அக்கால கட்டத்தில், ஈழத்தின் ஏனைய இனங்களைவிட நாகரிக வளர்ச்சியில் முன்னணியில் திகழ்ந்த நாகர் சமூகத்தினரே பிறநாட்டு மக்களோடு கடல் வாணிபத்திலும் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று நம்மை எண்ணத் தூண்டுகின்றன.

இதே போன்று, ஈழத்து முத்துக்கள் இந்திய மகதப் பேரரசுக்கு (கி.மு. 3ம் நூற்றாண்டு) கொண்டு செல்லப்பட்டதாக கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் காணப்படும் குறிப்பு நாகர் சமூகத்தின் பக்கமே நமது பார்வையைத் திருப்புகின்றது. (பார்க்க செ. கிருஷ்ணராசாவின் இலங்கை வரலாறு பாகம். 1)

ஏறக்குறைய இதே காலப் பகுதியில் ரோமாபுரியோடு தமிழர் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த மையை இந்திய கர்நாடக மாநிலத்தின் பிரம்மகிரியில் சேர்- மோட்டிமர் வீலர் எனும் ஆய்வாளர் மேற்கொண்ட அகழ்வாராய்வின் போது (செ. கிருஷ்ணராசாவின் இலங்கை வரலாறு பாகம் 1 பக் -88) கிடைத்த பெறுபேறுகள் மட்டுமன்றி உரோமைச் சக்கரவர்த்தி அகஸ்து சீசர் காலத்தைச் சேர்ந்த ஸ்டிராபோவின் விவரணம், பெரிபுளுஸ் (கி.பி.60) உரோமை நாட்டு வரலாற்றாசிரியர் பிளினியின் (கி.பி.77) இயற்கை வரலாறு, தொலமியின் (கி.பி. 150) பூகோள விவரணம் ஆகிய நூல்களும் (பேராசிரியர். சி. பாலசுப்பிரமணியனின் தமிழ் இலக்கிய வரலாறு பக் - 05) உறுதிப்படுத்தும்.

அராபியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் முன்பே கடலைத் தமது ஆணைக்குட்படுத்தி தமிழர் பிற நாட்டாரோடு செய்த இந்த வாணிபத்தின் பயனாக தோகை (மயில்) எனும் தமிழ்ச் சொல் எபிரேய மொழியில் துகி ஆகவும், அகில் என்னும் சொல் அல்கும் என்றும் ஆனது என்பார் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் (தமிழும் பிறமொழிகளும்- இளங்கதிர் - 1961)

மற்றுமொரு புகழ் பூத்த மொழியியல் அறிஞர் டாக்டர். மு.வ. அவர்கள் அரிசி எனும் தமிழ்ச் சொல் கீப்ரு மொழியில் அரைசா **(ARYZA)** ஆனது என்றும் பின் அது திரிந்து ஆங்கிலத்தில் **RICE** எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவார்.

இச்சொல் போன்று தமிழிலக்கியத்தில் உள்ள சாந்தம் (சந்தனம்) எனும் தமிழ்ச்சொல் பல மொழிகள் வாயிலாக ஆங்கிலத்திற்கு எட்டி **SANDAL** ஆயிற்று என்பது அறிஞரின் ஆய்வுரையாகும்.

அறிஞரின் ஆய்வின்படி கி.மு.6ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து அரிசி பபிலோனியாவிற்கு ஏற்றுமதியானது. இதேபோல கி.மு. 727 - 722ல் யானைகள் அசிரிய நாட்டு மன்னன் ஷால்மனேசருக்கு அனுப்பப்பட்டன. (மொழி வரலாறு பக் - 374)

தமிழர் பிறநாட்டாரோடு வாணிபம் செய்தமைக்கு அகநானூறு, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம் ஆகிய பழந்தமிழ் நூல்களும் சான்று பகரும். இந்நூல்கள் மட்டுமன்றி அவர்களது கடல் பயணத்திற்கு உறுதுணையாக விளங்கிய தோணியைக் குறிக்கும் படகு, கப்பல், நாவாய், மச்சிவாய், உரு, மரக்கலம், மிதவை, கட்டுமரம், புணை, தெப்பம், அம்பி, ஓடம் ஆகிய சொற்களும் கடலைக் குறிக்கும் முந்நீர், புணரி, ஆழி, பரவை, பவ்வம், ஆர்கலி, திரை முதலான சொற்களும் தமிழர் திரைகடல் ஓடித் திரவியம் தேடியமைக்குத் தக்க ஆதாரங்களாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட அகில் எனும் வாசனைப் பொருள் மட்டக்களப்பில் இருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் என்று நம்ப இடமுண்டு. ஏனெனில் இவ்வினிய நறுமணப் பொருள் மட்டக்களப்பு ஊவாக்காட்டுப் பிரதேசத்தில் சுமார் அறுபது ஆண்டு களுக்கு முன்புவரை காணக் கூடியதாக இருந்தது என்பார், திரு. வ.சிவசுப்பிரமணியம் அவர்கள். (மட்டக்களப்பு நாட்டாரியல் - பக் 30)


சிவசுப்பிரமணியம் அவர்களின் கூற்றுப்படி அகில் என்பது ஒருவகைக்கள்ளிச்செடி (COCTUS) ஆகும். இக்கூற்றின் உண்மைத் தன்மையை நான்மணிக் கடிகையின் பின்வரும் பாடல் அடிகள் உறுதி செய்யும்.

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்
மான் வயிற்றில் ஒள்ளரிதாரம் பிறக்கும்....

விளம்பி நாகனார் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல் கி.பி. 4ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்.

நன்றி:-
பழந்தமிழ் இலக்கியத்தில்
மட்டக்களப்புத் தமிழ்
(வாகரைவாணன்)

# அர்ப்பண வாழ்வினிலே....



'தாயின் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்குமுன்பே உன்னைத் திரு நிலைப்படுத்தினேன்' (எரே 1:5) என்னும் எம் ஆண்டவரின் வாக்குக்கிணங்க 'இதோ வருகின்றேன்' என்று எம் இயேசுவின் நற்செய்திப் பணியைத் தொடர்வதற்காக......

தன்னாமுனைப் பங்கின் மைந்தனாம் தம்பி ஐயா மரியதாஸ் அவர்கள் தன்னை ஆண்டவருக்கு அர்ப்பண மாக்கியுள்ளார். இவரது திருநிலைப்படுத்தும் திருப் பலியானது 30.09.2006 அன்று காலை 10.00 மணிக்கு எமது மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் எம் மறைமாவட்டக் குரு முதல்வர், யேசுசபைக் குருமுதல்வர் உட்பட பல அருட்பணியாளர்கள், துறவியர், பங்குமக்கள் அனைவரும் ஒன்று கூடி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர் அவர்களின் கரங்களினாலே தனது அர்ப்பணவாழ்வின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு இயேசுவின் நற்செய்திப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்ததன் மூலம் இயேசுவிற்குச் சீடனாகவும், குருகுலத்திற்குப் புதியவரும், இளையவருமான ஓர் அருட்பணியாளராகத் தன்னை இணைத்துக்கொண்டார் அருட்பணி மரியதாஸ் அவர்கள்.

இப்புதியவரான அருட்பணியாளர் அவர்கள் எம் பங்காகிய தன்னாமுனையில் வரலாறு படைத்துள்ளார். அதாவது எம் பங்கின் பாதுகாவலராம் புனித வளனாரின் ஆலயத்திலே நடைபெற்ற முதலாவது திருநிலைப்படுத்தல் திருப்பலி தனக்கேயுரியதெனவும், யேசுசபைக்கென எம் பங்கிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது அருட்பணியாளர் தான் என்பதையும் வரலாற்றிலே பொறித்து விட்டார்.

இப்புதிய அருட்பணியாளரின் முதற் திருப் பலியானது 01.10.2006 அன்று காலை 7.00மணிக்கு எம் பங்கிலேயே ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் நிறைவிலே எம் பங்கு மக்களால் கௌரவிக்கப்பட்டு பல பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டார்.


இப்புதிய குருவானவரை எம் பங்கிலிருந்து யேசுசபைகூடாக தனது சீடனாகத் தேர்ந்து கொண்ட எம் ஆண்டவருக்கு முதற்கண்எமது நன்றிகள். தன்னை விடவும் தன் மைந்தனைத் தேற்றக்கூடியவர் எம் ஆண்டவர் என்று தனது மைந்தனையே ஆண்டவருக்குக் கொடுத்த அவரது அன்னைக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மன்றாடுவோம். இன்னும் இப்புதிய குருவானவர் உட்பட எம் ஆண்டவர் இயேசுவின் ஊழியத்திற்கென தம்மையே அர்ப்பணமாக்கி வாழும் அனைத்து அருட் பணியாளர்கள், துறவியருக்காவும் மன்றாட நாம் மறக்கவே கூடாது.

'அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு' என்று எம் ஒவ்வொருவரது வீட்டுக் கதவினையும் தட்டுகிறார் எம் ஆண்டவர். எனவே எம் பிள்ளைகள் மத்தியிலும் 'இதோ வருகிறேன்' என்று சொல்லுமளவிற்கு தேவ அழைத்தல் பெருக வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்போம்.

- மதுஷாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

-தமிழ் நேசன்

# மாதிரி

நெற்றியில் தேங்கி நின்ற தங்கம்மாவின் வியர்வை முத்துக்களில் சங்கீதா தன் முகத்தைக் கண்டுகொண்டாள். தன் பருத்த உடலை வளைத்து அவள் மா இடிக்கின்ற அழகையே கண் இமைக்க மறந்து பார்த்துக்கொண்டிருந்தாள் சங்கீதா. தங்கம்மா குனிந்து நிமிர்ந்து உலக்கையை உரலில் போடும் ஒவ்வொரு தடவையும் அவள் கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிறு நெஞ்சிலே அடித்துக்கொண்டது. நெற்றியிலே முழு நிலவாக ஒளி வீசிக்கொண்டிருந்த குங்குமப் பொட்டு வியர்வை மழையினுள் நனைந்து கரைந்துகொண்டிருந்தது.

"சங்கீதா என்ன இது... உன்ர அறை எல்லாம் ஒரே குப்பையாய்க் கிடக்கு... புத்தகங்களும், உடுப்புக்களும் கோழி கிண்டின மாதிரி ..... அங்காலையும்..... இங்காலையும் இது என்ன வீடா அல்லது மாட்டுக் கொட்டிலா?" சங்கீதாவின் தந்தை சந்திரசேகரத்தாரின் சத்தம் வீடு முழுவதும் எதிரொலித்தது. சங்கீதா முணுமுணுத்தபடியே எழுந்து உள்ளே போனாள். அதற்கிடையே தங்கம்மா குரல் கொடுத்தாள், "ஐயா கொஞ்சம் பொறுத்துக்கங்க... தங்கச்சி சங்கீதாவப் பேசாதீங்க.. நாந்தான் வழமையா அதுட புத்தகங்களை அடுக்கி வைக்கிறது. இண்டைக்கு இந்த வேலையால மறந்திட்டனுங்க..."

"என்ன இன்னும் அவ சின்னப் பிள்ளையா? இப்படியே நீ இன்னும் அவட வேலையச் செய்துகொண்டிருந்தா நாளைக்குப் போற இடத்தில எப்படி அவ வாழப் போறா?" அவர் எப்படியும் பேசி கடைசியில் அவளுடைய திருமணத்தில்தான் முற்றுப்புள்ளி வைப்பார். "நான் இப்ப இந்த றூமை ஒழுங்கு பண்ணாம இருக்கிறதுக்கும் - என்ர பிற்கால வாழ்வுக்கும் என்னசம்பந்தம்? முட்டைக் கண்ணீரையும் சொட்ட அவள் தவறவில்லை. தான் தவறுதலாக சொல்லி விட்டோமோ எனப் பயந்த தந்தை அவளைச் சமாதானப்படுத்தி, உள்ளே அழைத்துப் போனார்.

தங்கம்மாவின் வரலாறு சோகம் நிறைந்த ஒரு கதை. தன் கணவனிடத்தில் அபாரபக்தியும், நம்பிக்கையும் வைத்திருந்த தங்கம்மாவை ஏமாற்றிவிட்டு அவள் கணவன் வேறொருத்தியுடன் ஓடிவிட்டான். கணவனைப் பிரிந்துநின்ற தங்கம் மாவின்மேல் அனைவருமே அனுதாபப்பட்டார்கள். அவள் கணவனை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டித் தீர்த்தனர். அதனால் அவளுக்கு கொஞ்ச மேனும் மன நிம்மதி ஏற்படும் என்பது அவர்களது நம்பிக்கை. ஆனால் தங்கம்மாவோ, இதற்கு எதிராகவே விளங்கினாள். தன் கணவனைப்பற்றிக் குறைவாகப் பேசுபவர்களுக்கு எல்லாம் தன் கனல் தெறிக்கும் பார்வையாலேயே அவள் பதில் சொல்லிவிடுவாள். தன் கணவன் வேறொருத்தியுடன் ஓடிவிட்டானே என்று அவள் கவலைப்பட்டாலும், அதற்காக அவனை அவள் வெறுக்கவில்லை. அவன்மீதுள்ள பக்தியைக் கொஞ்சமேனும் குறைக்கவில்லை. ஒருநாள் தன்னிடம் அவன் திரும்பி வருவான் என்பதில் அவளுக்கு நம்பிக்கை இருந்தது. அதனால்தான் இன்றுவரை அவள் கயிற்றையும், குங்குமத்தையும் காப்பாற்றிக் கொண்டே வருகிறாள்.

சங்கீதாவின் தந்தை சந்திரசேகரத்தார் வீட்டில் தன் ஒரே குழுந்தையோடு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்த வேளையில், தங்கம்மாவும் அந்த வீட்டு வாசலடியில் வேலைக்கு விண்ணப்பம்கோரி நின்றாள். தாய் இல்லாத தன் குழந்தையின் எதிர்காலத்தை எண்ணியபோது, அவளுடைய விண்ணப்பத்தை அவர் அங்கீகரிக்க வேண்டியதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தின் வயதை எட்டிப் பிடித்த சங்கீதா, நாகரீக வாழ்வின் உச்சியிலேயே நிற்க ஆசைப்பட்டாள். தாயில்லாத பெண் என்பதால், தந்தையும் கொஞ்சம் அதிகமாகத்தான் செல்லம் கொடுத்து வளர்த்து வந்தார். தங்கம்மாவும் சங்கீதாவின் வழிகளில் குறுக்கிட விரும்பவில்லை. தன் ஒரே மகள் எந்தவிதக் குறையுமின்றி சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதிலேயே தந்தை கவனமாக இருந்தார்.

நல்ல வாயாடியான அவளை யாரும் இலகுவில் பேச்சில் மடக்கிவிட முடியாது. தன்னுடைய நடத்தை,கொள்கை எல்லாவற்றையும் தன் பேச்சினாலே நியாயப்படுத்திவிடுவாள். பெண் விடுதலை, பெண்கள் சுதந்திரம் போன்ற சொற்களே அவளுக்கு நன்கு பழக்கப்பட்டவை. தன் வாதங்களுக்கு ஆதரவாக பாரதி, பாரதிதாசன் போன்றவர்களையும் துணைக்கு அழைத்துக் கொள்வாள்.

சில தடவைகளில் தங்கம்மா சங்கீதாவின் மேல் உள்ள பாசத்தினால், அவளைத் திருத்த முனையும்போதெல்லாம் அவள் தங்கம்மாவை எப்படியும் மட்டம் தட்டிவிடுவாள். "இங்க பாருங்க அன்ரி, உங்களுக்கு இந்த உலகமே விளங்காது. இண்டைக்கு உலகம் எந்தளவுக்கு முன்னேறியிருக்குது தெரியுமா? இப்பவும் நீங்க போன நூற்றாண்டிலதான் நிக்கிறீங்க!" சங்கீதாவின் இதுபோன்ற வாதங்களின்போது, தங்கம்மா தானாகவே ஒதுங்கிக்கொள்வாள். "ஏதோ படிச்ச பெண் இப்படியெல்லாம் நடக்க ஆசைப்படுது போல..." என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொள்வாள்.

ஆனாலும் தான் வளர்த்துவிட்ட பிள்ளை யாச்சே என்ற பாசத்தினால் அவ்வப்போது, சில வார்த்தைகளை அவள் நன்மைக்காகச் சொல்லும்போதெல்லாம், "அன்ரி... உங்களைப் போல, என்னையும் நினைச்சிற்றீங்க... உங்கட புருசன் வேறொருத்தியோட ஓடிப் போயிற்றான் எண்டு நல்லாத் தெரிஞ்சும் இத்தன வருசமா அவனுக்காகக் காத்திருக்கிறீங்க... உங்களைப்போல ஒரு பெண்ணை நான் காணவேயில்லை. உங்கட நிலையில் இப்ப நான் இருந்தா இந்தக் தாலியையும் - குங்குமத்தையும் தூக்கியெறிந்து போட்டு, போனவன் போகட்டும் எண்டு இன்னொருத்தனைக் கட்டியிருப்பன்... ஆனா நீங்க..." சங்கீதாவின் வார்த்தை அம்புகள் தங்கம்மாவின் உள்ளத்தை ஊடுருவிச் சென்றன. அவள் எதுவுமே பேசவில்லை. தன் கணவனைப்பற்றிய பக்தி அவளுக்குக் கொஞ்சமும் குறையவில்லை.

காலச் சக்கரம் உருண்டோடிச் சென்று, சங்கீதாவின் கலியாணப் பேச்சு என்ற சந்தியில் நின்றது. வயதுப் பெண்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் நெருப்பை மடியில் கட்டிக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார்கள். ஆனால், அவர்களுக்குத் தெரிவதில்லை, அந்தப் பெண்களே நெருப்பாக எரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று. கலியாணப் பேச்சு வந்தபோது, சீதனம் என்ற பேயும் தன் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. தன் அணைப்பிலேயே அல்லும் பகலும் வளர்ந்த பிள்ளை தன் கையைவிட்டுப் போவதென்றால் யாருக்குத்தான் கவலை இருக்காது? கலியாணமும் முறைப்படி நடந்தேறியது. தங்கம்மாவுக்குக்கூட கவலையில்லாமலா? ஆயினும், மாப்பாலூட்டி, சோறூட்டி வளர்த்துவிட்ட தன் சங்கீதா இன்று பூவோடும் பொட்டோடும் நிற்பதைக்கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

திருமணம் முடிந்த கையோடு பிறந்த வீட்டிலிருந்து - புகுந்த வீட்டிற்குப் புறப்பட வேண்டியவளானாள் சங்கீதா. தான் பெற்று, வளர்த்து, ஆளாக்கிவிட்ட கடமையை நிறைவேற்றிய நிம்மதி ஒருபுறம், சங்கீதாவைப் பிரிந்து வாழும் தனிமை மறுபுறமாக வாழ்ந்துகொண்டிருந்தார் ராஜசேகரத்தார்.

ஒரு நாள் ராஜசேகரத்தாரின் வீட்டில் என்றுமே அறிமுகமில்லாத புதிய ஒருவன் வந்து, தங்கம்மாவைப்பற்றி விசாரித்தான். உள்ளே இருந்த தங்கம்மாவிற்கு அவன் பேசிய சத்தம் என்றோ ஒருநாள் ஒலித்த குரலாகக் கேட்டது. உடனே வெளியில் ஓடிவந்து பார்த்தாள். அவன்... அவன்.. தங்கம்மாவின் கணவனேதான்! தங்கம்மாவைக் கண்ட அவன் கண்ணீரோடு அவள் காலில் விழப் போனான். வேசமாக அவனைத் தடுத்து நிறுத்திய அவள் கண்கள் கலங்க அவனையே விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"தங்கம்மா... இஞ்ச பார். இத்தின வருசமா நான் உன்ன விட்டுப் பிரிஞ்சி இருந்தாலும், எனக்கே நிம்மதியில்லை. நான் நம்பிப் போனவ என்னக் கைவிட்டிற்று எங்கேயோ போயிற்றா... உன்ன ஒரு தடவ பார்த்து, உன்ர காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டிற்று எங்காவது போய் செத்துவிடுவம் எண்டுதான் எங்கெல்லாமோ விசாரிச்சு ஒருமாதிரி நீ இருக்கிற இந்த வீட்டக் கண்டுபிடிச்சன்..." தங்கம்மா ஆதரவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் தன் கணவனை எங்குமே போகவிடவில்லை. தான் இத்தனை வருடங்களாகக் காப்பாற்றி வந்த மஞ்சள் கயிறும், குங்குமமும் இப்போதுதான் புதுப்பிக்கப்பட்டதாக உணரலானாள்.

புகுந்த வீட்டிற்குச் சென்றிருந்த சங்கீதா சில மாதங்களில், கணவனோடு சண்டையிட்டுக் கொண்டு பிறந்த வீட்டிற்குத் திரும்பிவிட்டாள். தன் கணவன் கைநீட்டி தன்னை அடித்துவிட்டான் என்பதுதான் அவளுடைய வருகைக்கான காரணம். உடனடியாகவே தனக்கு விவாகரத்து வாங்கித் தரும்படி தந்தையை நச்சரித்தாள். இனியும் அந்த மிருகத்தோடு வாழ முடியாதென வாதாடினாள். ராஜசேகரத்தார் எவ்வளவு சொல்லியும் அவள் கேட்கவே இல்லை. தன் மகளின் பிடிவாதத்திலே அவரும் சிக்குண்டுவிட்டார். சங்கீதாவின் நிலைமை தங்கம்மாவுக்குக்கூட வருத்தமாகத்தான் இருந்தது.

"இஞ்ச பாரும்மா சங்கீதா... இத்தின வருசமா என்னைப் பிரிஞ்சி... இப்ப வந்திருக்கிற என்ர புருசன நான் வெறுக்கல்ல... ஆனா நீ இந்தச் சின்ன விசயத்துக்காக விவாகரத்து வேண்டுமென்டு இஞ்ச வந்திருக்கிறியே... ஏதோ நானும் உன்ர நல்லவாழ்வ கண்குளிரக் கண்டு சாக வேண்டு மெண்டுதான் ஆசப்படுறன். நீ படிச்சவ. நல்லா யோசிச்சு நல்ல முடிவுக்கு வா..."

தங்கம்மாவின் இந்தப் பேச்செல்லாம் ஆரம்பத்தில் அவளுக்கு எரிச்சலைத்தான் ஊட்டியது. ஆனால், ஆழமாகச் சிந்திக்கச் சிந்திக்கத்தான் புதிய பல அர்த்தங்கள் ஊற்றெடுக்கத் தொடங்கின. யாருடனோ ஓடிவிட்டு இருபது வருசத்திற்குப் பிறகு வந்த தன் கணவனை ஏற்றுக்கொண்ட தங்கம்மாவையும், தன்னையும் ஒரு தடவை நினைத்துப் பார்த்தாள். படிக்காத பட்டிக்காட்டுப் பெண்ணான தங்கம்மாவின் தியாகத்தையும், நாகரீக வெள்ளத்தில் மூழ்கிப்போய், பிடிவாதத்தில் சிக்குண்டிருக்கும் தன் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். தங்கம்மாவின் வாழ்க்கை தனக்கு மிகப் பெரும் மாதிரி என உணர்ந்தவளாய் ஒரு புதிய முடிவுடன் அப்பாவை அணுகுகின்றாள்.

"அப்பா.... இண்டைக்கே நான் அங்க போக வேணும். என்ர புருசன்ட காலில விழுந்து, மன்னிப்புக் கேக்கணும். உடனே வாங்கப்பா..."

ராஜசேகரத்தாரின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. தான் காண்பது கனவா நனவா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். தூரத்தில் சங்கீதா கூறிய வார்த்தைகளைக் கேட்டு தங்கம்மா புன்னகைக்கிறாள்.

## "தொண்டன்" வாசகர் வட்டம்

"தொண்டன்" சஞ்சிகையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும், வாசகர்களோடு நல்லுறவை வளர்க்கவும் 'வாசகர் வட்டம்' ஒன்றை ஆரம்பிக்க உள்ளோம்.

வாசகர் வட்டத்தில் இணைந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பகிர்ந்து தொண்டன் வளர்ச்சிக்குத் தோள் கொடுக்க அன்போடு அழைக்கிறோம்.


ஆர்வமுள்ள வாசகர்கள் தங்கள் பெயர் முகவரிகளை கூடிய விரைவில் அனுப்பிவைக்கவும்

*ஆசிரியர்*
(தொண்டன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒத்தமை நற்செய்திகள்

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று நற்செய்திகளும் ஒத்தமை நற்செய்தியினுள் அடக்கப்படும். இவை மூன்று நற்செய்திகளும் யோவான் நற்செய்தியுடன் ஒப்பிடும் போது முற்றிலும் வேறுபட்டுக் காணப்படும். இவ்வொத்தமை நற்செய்தியானது பொருளடக்கம், திட்ட அமைப்பு, இலக்கியத் தன்மை ஆகியவைகளில் நாலாம் நற்செய்தியில் இருந்து முற்றிலும் வேறுபாடானதாகும் ஆராய்ச்சியின்படி இம்மூன்று நற்செய்திகளையும் ஒப்பிட்டுப்பார்த்த போது இவை மூன்றிலுமே இயேசுவின் வாழ்வில் காணப்படும் அதே நிகழ்ச்சிகளை ஒரே வரிசையில் ஒரே வார்த்தையினால் விபரித்துக் கூறியுள்ளதை காண முடிகிறது.

இதேவேளை சில இடங்களில் பெரும் வேறுபாடுகளும், வேறு இடங்களில் ஒரு சிறு வேறுபாடுகளுடனும் காணக் கூடியதாய் உள்ளது. எனவே அம்மூன்று நற்செய்திகளிலும் ஒற்றுமையுடன் கூடிய வேற்றுமையும் வேற்றுமையுடன் கூடிய ஒற்றுமையும் காணக் கூடியதான தன்மை உள்ளதால் இதனை ஒத்தமை நற்செய்தித் தன்மை என்றும், இம்மூன்று நற்செய்திகளையும் ஒத்தமை நற்செய்திகள் என்றும் அழைக்கின்றோம்.

பொதுவாக இம்மூன்று நற்செய்திகளும் இயேசுவின் வார்த்தைகள், செயல்கள், அருஞ் செயல்கள், உவமைகள், தர்க்கங்கள் ஆகியவைகளை ஒரே மாதிரியாகவே கூறுகின்றன.

- (உ+ம்):-இயேசுவின் பகிரங்கத் தோற்றத் தினை திருமுழுக்கின் போது "என் அன்பார்ந்த மகன் இவரே! இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று மூன்று நற்செய்திகளிலும் காணக் கூடியதாய் உள்ளது.
  (மத் 3:13-17, லூக் 3:21-22, மாற் 1:9-11)

- இயேசு அலகையினால் சோதிக்கப்படல்:-
  (லூக் 4:1-30, மத் 4:1-11, மாற் 1:12-13)

- இயேசு இறையரசு குறித்து அறிவிக்கின்றார்.
- "மனந்திரும்புங்கள் விண்ணரசு நெருங்கிவிட்டது"
- (மத் 4:17, மாற் 1:15, லூக் 4:43)


- பேய்பிடித்தவன் இயேசுவைப்பற்றிக் கூறும் சான்று "நாசரேத்து இயேசுவே! உமக்கு இங்கு என்ன வேலை, எங்களை ஒழித்து விடவா வந்தீர்......"
  (மாற் 1:24, லூக் 4:34, மத் 8:28-29)

இவை போன்ற ஒத்தமை வார்த்தைப் பகுதிகளும், மேலும் இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்ப்பு போன்ற பகுதிகளையும் (மத் 26-28, மாற் 14-16, லூக் 22-24)இவ்வொத்தமை நற்செய்திப் பகுதிகளில் காணக் கூடியதாய் உள்ளது.

எனவே இவ்வாறு பல பகுதிகளை நற்செய்தியாளர் மூவரும் ஒருமித்து, ஒரேவிதமாய்க் கூறுவதால் இம் மூன்று நற்செய்திகளும் ஒத்தமை நற்செய்தி என அழைக்கப்படுகின்றன. இந்நற்செய்திகள் மூன்றிலும் உள்ள ஒத்தமைத் தன்மையினை நான்காம் நற்செய்தியிலே காணமுடியாது. அது முற்றிலும் வேறுபாடுடையதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டனின் சில நிமிடங்களுக்காக இலைமறை காயாக வாழ்ந்து வரும் ஒருவரைச் சந்தித்தோம். பிரபலமானவர் என்று தங்களை இனங்காட்டிக் கொள்வோர் அதிகமாகக் காணப்படும் இக்காலத்தில் தன்னடக்கத்துடன் வாழும் அம்மனிதரைச் சந்திப்பதில் மிகவும் பெருமையடைகின்றோம். மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையின் விளையாட்டுத்துறை ஆசிரியரான திரு.விஜய ரெட்ணம் விஜயசிறி அவர்களைப்பற்றித்தான் இங்கு நாம் குறிப்பிடுகின்றோம். இவரைத் தொண்டனுக்காகப் பேட்டி காண அணுகிய போது பிடிவாதமாக மறுத்துவிட்டார். கடும்பிரயத்தனத்தின் பின்னரே செவ்வி தர ஒப்புக்கொண்டார்

**திரு.விஜயசிறி அவர்களே! உங்களைப்பற்றி சிறிது கூறுங்களேன்**

நான் மட்டக்களப்பு ஆரையம்பதியில் பிறந்தேன். ஆரம்பக்கல்வியை புனிதமிக்கேல் கல்லூரியிலும் பின்னர் உயர்வகுப்புக்களை மட்/ சிவானந்தாவிலும் பெற்றுக்கொண்டேன். க.பொ.த (உ.த) விஞ்ஞானப் பிரிவில் கற்றேன். பின்னர் வவுனியா கல்வியியல் கல்லூரியில் உடற்கல்வியியல் ஆசிரியர் டிப்ளோமா பட்டம் பெற்றுக்கொண்டேன். அங்கு இறுதியாண்டுப் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றதால் தேசிய பாடசாலை ஆளணியில் இணைத்துக் கொள்ளப்பட்டேன். எனது மனைவி வளர்மதியும் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் தான். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

**உங்கள் விளையாட்டுத்துறை ஈடுபாடுபற்றிச் சொல்லுங்கள்**

நான் படிக்கும் காலத்தில் பெருவிளையாட்டுகளில் உதைபந்தாட்டத்திலும், மெய்வல்லுனர் போட்டிகளிலும் எறிதல் சம்பந்தமான விளையாட்டுகளிலும் ஈடுபாட்டையும், திறமைகளையும் காட்டியுள்ளேன். இவ்வாறுதான் விளையாட்டுலகில் தடம்பதிக்கத் தொடங்கினேன்.

**நீங்கள் பல்வேறு விளையாட்டுக்களில் நடுவராகக் கடமையாற்றியுள்ளீர்கள் என்று அறிகின்றோம். அது பற்றி விளக்குவீர்களா...?**

ஆம் ! விளையாட்டுக்களில் நடுவராகப் பணி புரிவதற்கு விசேட தகுதிச் (licence) சான்றிதழ் பெறப்பட வேண்டும். அப்போது தான் நடுவராகப் பணிபுரிய ஒருவர் அனுமதிக்கப்படுவார். அதிலும் வெவ்வேறு தரங்கள் உண்டு. என்னைப் பொறுத்தவரையில் எல்லே விளையாட்டுக்கான தரம் 2ற்கான நடுவர் சான்றிதழ் பெற்றுள்ளேன். வலைப்பந்தாட்டத்தில் A த்தரம் பெற்றுள்ளேன். அதற்கு முன்னர் C மற்றும் B தரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

1999ம் ஆண்டில் தேசிய ஒலிம்பிக் சம்மேளனம் Administration Course க்கான விண்ணப்பம் கோரியிருந்தார்கள். அதற்கு விண்ணப்பித்தேன். அங்கு வலைப்பந்தாட்டப் பயிற்றுனர் பயிற்சி நெறியில் கலந்து கொண்டேன். அத்துடன் இலங்கையின் மெய்வல்லுனர் சம்மேளனம் நடத்திய தொழில்நுட்பவியலாளர் (Technical officer) பரீட்சையிலும் சித்திபெற்றுள்ளேன்.

**சர்வதேசரீதியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும் நடுவராகப்பணி புரிந்துள்ளீர்களா?**

ஆம் ! தெரிவு செய்யப்பட்டுள்ளேன். அண்மையில் ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளுக்கான நடுவர் தெரிவு சிங்கப்பூரில் இடம் பெற்றது. இதில் நடுவர் தெரிவும் பயிற்சியும் தரப்பட்டது. இலங்கையில் இருந்து நானும், இன்னொரு சிங்கள நண்பரும் கலந்து கொண்டோம். இது ஏழு நாட்கள் நடைபெற்றன..

**இவ்வாறான நடுவர் தெரிவு எவ்வாறு இடம்பெற்றது?**

எழுத்துப்பரீட்சை, செய்முறைப்பரீட்சை என்பன இடம்பெறும். குறிப்பாக Beep test என்றொரு பரீட்சை உண்டு. ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசையொன்றுக்கு இசைவாக ஆர்முடுகி ஓடவேண்டும். இது தான் சற்றுக்கடினமான பரீட்சை. வலைப்பந்தாட்டத்தில் A தரம் பெற்ற நடுவர்கள் 13பேர் மட்டுமேயுள்ளனர். அதில் நானொருவனே தமிழன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**✤ இவ்வகையான நடுவர் பணிகளில் தமிழ் பேசும்மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

✤ அதில் ஓரளவு உண்மையுண்டு. அத்துடன் நம்மவர்கள் இவ்விடயங்களில் காட்டும் ஈடுபாடும் மிகக்குறைவு.

**✤ நடுவர் தொடர்பான பரீட்சைகள் என்ன மொழி மூலம் இடம்பெறுவது வழக்கம்?**

✤ எல்லாம் சிங்களத்தில்தான் இடம் பெற்றன. ஆங்கில மொழிபெயர்ப்பும் தருவார்கள். ஆனால் தற்போது தமிழிலும் நடைபெறுகின்றது. இதற்குப் பொறுப்பாக வடக்கு – கிழக்குக்குப்பகுதிகட்கு நான் நியமிக்கப்பட்டுள்ளேன்

**✤ இதற்கு எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?**

✤ அவ்வவ்விளையாட்டுகளின் மாவட்ட சம்மேளனங்களினூடாக விண்ணப்பிக்க வேண்டும். இவை தொடர்பாக உதவிட நான் தயார். விண்ணப்பதாரிகட்கு செய்முறை அறிவு மிகவும் அவசியம். வலைப்பந்தாயின் அதற்கான 20விதிகளும் அத்துபடியாக இருக்க வேண்டும்

**✤ இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சி மிகவும் மந்தமாக உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. இது உண்மையா?**

✤ உண்மைதான். வளர்ச்சி என்பது இல்லை. குறிப்பாக பெற்றோரின் ஒத்துழைப்பு அறவே இல்லை. கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் விளையாட்டுக்குக் கொடுப்பதில்லை. அத்துடன் விளையாட்டுத் திடல்களின் பற்றாக்குறை இதற்கு இன்னொரு காரணம்.. இது தவிர விளையாட்டுக்கான தரம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள் இல்லை.

**✤ விளையாட்டுத் துறையில் ஈடுபட்ட உங்களுக்கு மறக்கமுடியாத சம்பவங்கள் இடம் பெற்றிருக்குமே?**

✤ ஆம்! (சிரிக்கின்றார்) சில ஆண்டுகளுக்கு முன் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியொன்று முதன் முறையாகக் கிளிநொச்சியில் இடம் பெற்றது. அதற்கு விளையாட்டுத்துறை உயர்அதிகாரிகளுடன் நானும் சென்றிருந்தேன். எனது பெயர் விஜயசிறி என்பதனால் என்னை பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவன் என்று நினைத்து விட்டார்கள்.

**✤ உங்கள் துணைவியாரும் சிறந்த விளையாட்டு வீராங்கனை என்று அறிகின்றோமே?**

அவர் சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனை. இலங்கையின் தேசிய வலைப்பந்தாட்ட அணியின் குழாமில் (Pool) அவர் உள்ளார்

இறுதியில் அவருக்குத் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றோம். இந்த மனிதருக்குள் இத்தனை திறமைகளா என்று வியந்தோம்.

**–ஆழியோன்**

## அரிய நூற்றொகுதி

The Catholic church in srilanka என்னும் நூல்தொகுதியொன்று, தற்பொழுது மட்/புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் வாசகர்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேய காலந்தொட்டு 1923ம் ஆண்டு காலவரையிலான கத்தோலிக்க திருச்சபையின் வரலாறு ஆவணமாக்கப்பட்டுள்ளது. அருட்பணி. வி. பெர்ணியோலா யே.ச அடிகளாரால் இத்தொகுதி எழுதப்பட்டுள்ளது.. பதினான்கு நூல்கள் இத்தொகுதியில் உள்ளன. இதில் ஒரு புத்தகத்தின் அட்டைப் படமாக புனித மிக்கேல் கல்லூரியும், இன்னொன்றில் அமிர்தகழி கப்பலேந்தி மாதா கோவிலும் (பழையது) காணப்படுகின்றன.

கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ஜேம்ஸ் பீரிஸ் (அன்புச் சகோதரர் சபை)அவர்களின் வழிகாட்டலின் கீழ் இத்தொகுதி கொள்வனவு செய்யப்பட்டது. அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியில் கொள்வனவு இடம்பெற்றது. இக்கல்லூயின் ஆளணியைச் சேர்ந்த அருட்பணி A. நவரெட்ணம் அடிகளாரும் உறுதுணையாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணங்களும்..... பிணங்களும்


-பாய்வா-

உத்தரத்தில் தொங்கும் ஒரு
எட்டுக்கால் பூச்சியின் பிணம்

பொட்டும் பூவுமென்று
சட்டமிட்ட புகைப்படத்தில் புன்சிரிப்போடு
அம்மா என்கிற சுமங்கலிப் பிணம்

தூரிகை வரைந்த உணர்வுகளோடு (ரௌத்ரம்,
கருணை)
ஊதுபத்தி நாற்றத்துக்கு ஒதுங்கமுடியாதபடி
சுவரில் வரிசை கட்டி சாமிகளின் பிணங்கள்-
சவக் கிடங்கில்

அ) ஏசீ அறைகளில் விஸ்கி குடித்தபடி
சோசலிஸம் பேசியவன்
ஆ) கல்லூரி வகுப்புகளில் நம்பிக்கையற்றுப்போன
ரியூசன் வகுப்பு மாணவன்
இ) கிரடிட்காட் வைத்திருந்ததாய்
அதிசயிக்கப்பட்ட பிச்சைக்காரன்



ஈ) .....எக்செட்ரா என
அடையாளங்காணப்பட்ட பிணங்களோடு

அறைக்கு வெளியே
கொலோன் பூச்சிலும்
கோடையில் புழுங்கி நாறும்
பிணங்களின் நடுவே
ஆடையாபரண அலங்காரமின்றி
தோலுரித்த கவிதைகளின் நினைவோடும்
(மரபாளர் மன்னிக்க)
கூருடைந்த குமிழ்முனைப் பேனாக்களின்
மீள்பிறப்புக் கனவுகளோடும்,

தாடி வளர்த்து
பீடி குடித்தபடி
எனக்குள்ளும் தூங்கும்
இன்னொரு பிணம்.

(பாதிப்பு- 'சமயவேல்')




| 1ம் பரிசு - 300/= | 2ம் பரிசு - 200/= | 3ம் பரிசு - 100/= |
|---|---|---|
| தே. டிஸ்கரன்<br>கல்லடி வீதி<br>களுதாவளை -01<br>களுவாஞ்சிக்குடி | L. கௌசலா<br>6/134 கோயில் வீதி<br>சொறிக்கல்முனை<br>சம்மாந்துறை | ஸ். வோணிஜா<br>புதுநகர்<br>மட்டக்களப்பு |

போட்டியில் பங்கு கொண்ட தம்பி, தங்கையர் அனைவருக்கும் எமது நன்றி.


## காந்தியைக் கவர்ந்த ரஸ்கின் கருத்துகள்

1. தனி மனிதனது நலம் பொதுநலத்துள் அடங்கும்
2. உழைத்துப் பிழைப்பது எல்லோருக்கும் பொது உரிமையாகையால் எல்லா வேலைகளுக்கும் சம மதிப்பு உண்டு.
3. உழைப்புள்ள வாழ்க்கையே மேலானது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனக்கோலம்

*R.* ஸ்ரான்லி பிரபாகரன்

## ஆலோசனைகள் ஆபத்தாவது எப்போது? ஆரோக்கியமாவது எப்போது?



இன்று உளவளத்துணை, உளவள ஆலோசனை என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற **Counselling** என்னும் சொல் பலராலும் செவிமடுக்கப்படுகின்றது; பேசப்படுகின்றது. இந்த விடயம் மிகவும் திட்டமிடப்பட்டவகையிலும், வரையறுக்கப்பட்ட விதத்திலும், கல்விப் புலமைப் பின்புலத்திலும், ஆய்வுகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது ஒருபுறமிருக்க, எமது அன்றாட வாழ்விலே புத்திமதி கூறுதல், ஆலோசனை கூறுதல் என்பன பல தடவைகள் அத்துமீறிய செயலாகவும், சிலவேளைகளில் ஒவ்வொரு மனிதனும் சமூகத்துக்குப் பொருத்தப்பாடு உடையவனாக மாற்றுவதாகவும் அமைகின்றன. இக்கட்டுரையில் அன்றாடவாழ்வில் நாம் ஒருவருக்கொருவர் பலதடவைகளில் புத்திமதி சொல்லிக் கொள்கின்றோம். இவை பல தடவைகளில் உணர்வுகள், நடத்தைகள் தொடர்புடைய புத்திமதிகளாக அமைகின்றன. இவை எந்த அளவுக்கு மனித மனங்களில் பாதகத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும், எத்தகைய புத்திமதிகள் பயன் தரும் என்பதையும் இக்கட்டுரையில் காண்போம்.

ஆலோசனை கூறுகின்றோம் என்று கூறிக்கொண்டு பலர், பலருடைய மனங்களைப் புண்படுத்தி விடுவதை அன்றாடம் காணுகின்றோம். குறிப்பிட்டுக் கூறினால் ஒருவர் முடிவெடுப்பதற்கு மற்றவர் பலவழிகளிலும் ஆலோசனை கூறுகின்றார் என்ற தோரணையில், ஒருவரின் சிந்தனை, உணர்வுகள், விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றினைக் குழிதோண்டிப் புதைத்து விடுவதைத்தான் அன்றாடம் காண்கின்றோம். இது உண்மையில் எமது சமுதாயத்தில் தொடர்ந்தும் நீடித்து நிற்கின்ற பல்வேறுபட்ட மனவேதனைகளையும் மனித மனங்களின் குழப்பநிலையையும், மற்றவர்மேல் எரிந்து விழுகின்ற நடத்தைகளையும், பொறாமை போன்ற ஒழுக்கப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கக் காரணமாகலாம். எனவே, எம்மத்தியில் ஆரோக்கியமானதொரு சமூகத்தை உருவாக்க வேண்டுமாயின், இன்று ஒருவரின் அனுமதியின்றி அவரது சொந்த விடயங்கள் தொடர்பாக ஆலோசனை கூறுவதைத் தவிர்த்துக் கொள்வோம். "நாம் புத்திமதி சொல்லித்தான் அவர் வாழவேண்டும்" என்கின்ற தப்பெண்ணமே படிப்படியாக வளர்ந்து புத்தி சொல்லப்படுபவருக்கு மனவேதனையையும், புத்தி கூற நினைப்பவருக்கு இயலாத ஒரு மனநிலையையும் ஏற்படுத்தி விடுகின்றது.

அன்றாடம் ஆலோசனை கூறுகின்றோம் எனக்கூறிக் கொண்டு நாம் மற்றவரின் மனதைப் பலதடவை புண்படுத்திவிடுகின்றோம். உதாரணமாக கணவனை இழந்த பெண் அல்லது மனைவியை இழந்த ஆண் தொடர்பாக இருவேறுபட்ட வாழ்க்கைகளை அறிமுகப்படுத்துகின்றோம். அவற்றை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கட்டாயப் படுத்துகின்றோம். இவற்றுக்கு நாம் வைத்துள்ள பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை. ஆனால் உண்மையில் இது அத்து மீறிய பாதிப்பாகும். இதே போன்று பிள்ளையின் கல்வித் துறையைத் தெரிவுசெய்வதில் பெற்றோர், சமூகம், ஆசிரியர் எனப்பலர் தமது தேவைகளையும், கருத்துக்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக பிள்ளையின்மேல் ஒரு பாரச்சுமையை ஏற்றி விடுகின்றனர். இதைவிட திருமணத்திற்கான வற்புறுத்தல்கள், ஆலோசனை என்ற பெயர்தாங்கி நடமாடுகின்றன.

இவ்வாறாக ஆலோசனை என வேடமிடப்பட்டு நிகழ்கின்ற வற்புறுத்தல்கள் பொது வாழ்க்கையில் மலிந்து கிடக்கின்றது. ஆதலால், இத்தகைய நடவடிக்கைகளால் ஏற்படத்தக்க உளத்தாக்கங்களையும், நடத்தைமாற்றங்களையும் நாம் கவனிக்க வேண்டும்.

வாழ்வின் முக்கிய விடயங்களுக்கான வழி காட்டல்கள் தேவைப்படுகின்றபோது பொதுவாக அனுபவம் குறைந்தவர்கள், அனுபவசாலிகளிடம் செல்வதுண்டு. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, கண்மூடித்தனமாக ஆலோசனை பெறுபவருக்கு எதுவுமே தெரியாது என்ற எண்ணத்துடன் வழி காட்டுதல் பொருந்தாது. ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் ஒரு விடயம் தொடர்பான ஒரு கருத்து, எதிர்காலம் கனவு இருக்காலாம். முதிர்ச்சி அடையாத ஒரு நிலையில் இதனை நன்கு விளங்கிக் கொள்ளவோ அதற்குச் சரியான தொரு சிந்தனைவிளக்கம் கொடுக்கவோ முடியாத நிலை இருக்கும். ஆனால், காலப் போக்கில் வாழ்வின் அனுபவங்களால் முதிர்ச்சி கொண்டு தனது சொந்தக் கருத்துக்கும், ஆலோசனை வழங்கியவரின் கருத்துக்கும் முரண்பாட்டினை ஒருவர் காணப்பாரேயாகில் அவரது சிந்தனைமுறை, நடத்தை, உணர்வுகளில் பல மாற்றங்கள் இடம்பெறலாம். அதாவது அதற்குப்பின்னர் யாராவது ஆலோசனை வழங்கினால் அதனைச் சந்தேகக்கண் கொண்டுபார்த்தல் ஆலோசனை வழங்கி யவரையோ, அல்லது அவரைப் போன்ற தோற்றம் கொண்டவரையோ வெறுத்தலும், எதிர்த்தலும், வாழ்க்கையில் "ஒருகாலகட்டத்தில் அடைய வேண்டியதொன்றை இழந்து விட்டோமே" என்கின்ற விரக்திநிலை என்பனவும் தோன்றலாம்.

மேலும் மனக்காயங்களுக்குள்ளாகி சோகத்திலும், வேதனையிலும் உள்ளவர் அச்சோகத்தில் அமிழ்ந்து போவதற்குரிய ஆலோசனைகளை, உறவாடல் முறைகளை அன்றாடவாழ்வில் ஏற்படுத்திவிட்டோம். முக்கியமான ஒன்றை நிரந்தரமாக இழந்து விட்டால் அவர் அதனைத் தாங்கிக் கொள்ளமுடியாது அழுது புலம்பக்கூடும். இக்கட்டத்தில் அவரை அழவிடமால் "அழாதே! சீ... இதுக்கெல்லாம் இப்படி அழுகிறாயே" எனக் கூறுதல் துன்பப்படுபவரின் உணர்வுகளை அடக்கி அமிழ்த்துகின்ற ஓர் ஆலோசனையாகும். அடக்கப்பட்ட அந்த உணர்வுகள் வேறொரு விதத்தில் வெடிக்கவும் சந்தர்ப்பம் உண்டு.

சிலர், யாரவது தம்மிடம் வந்து ஆலோசனை பெறவேண்டும் என்பதில் ஆவலாக இருப்பார்கள். இவர்கள் தம்மை எல்லாம் தெரிந்தவர்களாகக் காட்டிக்கொள்வார்கள். தமக்குத் தெரிந்ததை தெரிந்ததாகவும், தெரியாததைத் தெரியாததாகவும் காட்டிக் கொள்வதே நற்பண்பாகும். மடையா, நான் சொல்வதை முதல் கேளு: நான் சொல்லுறபடி செய், எல்லாம் சரிவரும், என்று வழிகாட்டுதல் மனிதனுக்கே உரித்தான ஆற்றல்களை மதிக்காத தன்மையாகும். இதை விட இத்தகைய ஆலோசனை கூறுவோர் பல தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் தம்மிடம் ஆலோசனை பெற வைப்பதும் உண்டு.

ஒருவரது வாழ்க்கையின் முடிவு பற்றி அவரே முடிவெடுக்க வேண்டும். அதற்கு நாம் துணை செய்யலாம். துணை செய்வதென்றாலும் அதில் பல ஆழமான அர்த்தம் உள்ளது. எனது முடிவை அவருள் திணிப்பது துணை இல்லை. மற்றவரின் மனதை ஆய்ந்தறிந்து அவரது தேவை என்ன, அவரது நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்ள எமக்கு நாமே நேரம் கொடுக்கவேண்டும். அதன் பின்னர்தான் பிரச்சினைபற்றியோ வேதனைபற்றியோ பேச முயலவேண்டும்

இந்தக் கட்டுரையிலே நாம், அன்றாடம் பலருக்கு ஆலோசனை கூறுகின்றோம், வழிகாட்டுகின்றோம் என்ற வகையில் உண்மையில், இக்கட்டான சூழ்நிலையில் தள்ளிவிடுகின்ற செயலாக அமைவதுபற்றிய விளக்கத்தைக் கண்டோம். இனியாவது அன்றாடவாழ்வில் ஆலோசனை கூறுதல் என்றவகையில் மற்றவர்களின் உணர்வுகளை அசட்டை செய்து, சிந்தனைகளை குறைத்து நோக்குகின்ற தன்மைகளைக் குறைத்து வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகின் அலங்காரம்

-தொடர்கதை

**Stop!**.... Stop!.... தம்பி கொஞ்சம் நிறுத்துப்பா.... நீ சொன்ன இவ்வளவையும் ஒரே டேக்கில எடுத்துடலாமா.....

இல்ல சேர்.... ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு அழகு..., ஒவ்வொரு விஷயத்தையும் ரசிச்சி ரசிச்சி படமாக்கணும்... அப்பதான் சேர் அந்த அழகின் பரிமாணங்கள் பளிச்சிடும்.

ம்....அது சரி.... இந்த கத நகர்ர விதம் கொஞ்சம் ஸ்லோ மூவிங்கா இருக்கும் போல தோணுதில்ல...

ஆமா சேர்... இப்ப அப் பிடித்தான் இருக்கும் அப்புறமா எடிட்டிங் நேரத்தில சரிபண்ணிக் கலாம்...

இருந்தாலும் ஆரம்பத் திலேயே கொஞ்சம் சஸ்பென்சா கதையை நகர்த்தினா பரவால்ல போல தோணுதே....

சரியா சொன்னீங்க சார்....

**உழைச்சாச்சு, வயிறு முட்டக் குடிச்சாச்சு, நல்லா காரத்தோட கொட்டியாச்சு, இன்னுமென்ன இயந்திரங்களப்போல பிள்ளைகளப் பெத்தாச்சு, குறட்டவிட்டாச்சு...**

இந்தக் கதையில் முக்கிய பாத்திரம் நம்ம அன்னமேரி இல்லசேர்... அப்படின்னா அந்த அழகின் அலங்காரம் அன்னமேரி இல்லங்கிறதாப் போச்சு...

நீ சரியான ஆளுதா னப்பா... கதைக்குள்ள கதை யைக் கொண்டுபோறன் என் றிறா....ம்.. கரியோன் (Carryon)

நாளாந்தம் தன் கணவனோடு கொஞ்சி, சீண்டி, சின்னதா கோபப்பட்டு... பின் சிணுங்கி.... சமரசமாகி...... ஊடலும் கூடலுமாக வாழ்க்கையை அற்புதமாக அனுபவிக்க வேணும் என்பதில் ஒரு சராசரிப் பெண் ணான அன்னமேரிக்கு கரம்பிடித்த நாளிலிருந்து ஆசையோ ஆசை. ஆனால் ஒவ்வொரு நாளும் இந்த ஆசைகள் எல்லாம் நிராசையாகவே போய்விடுகிறது.

அய்யாத்துரைக்கு கள் ளுப்போதை மாத்திரம்தான் தெரியும். பின் கும்பகர்ணனை என்ன செய்வது என்று ஒவ்வொரு இரவும் தலையில் தண்ணியை வார்ப்பது அவள் பழக்கமாகப் போச்சு. அனேக பெண்கள் இப் படித்தான்.... தங்கள் சின்னச் சின்ன ஆசைகளை மனசுக் குள்ளேயே மூடி மறைச்சுக் கொண்டு போறாங்க. இருந்தாலும் அன்னமேரியைப்போல் இரவில் தலையில் தண்ணியை இறைப்பது ஒரு சிலராகத்தான் இருக்க முடியும் மற்றப்படி... இதனாலேயோ என்னவோ சில ஆண்கள் தங்கள் மனைவியருக்கும் குடிக்கப் பழக்குகின்றார்கள். குடிச்சாச்சு, நல்ல காரத்தோட கொட்டியாச்சு, இனி என்ன இயந்திரங்களப்போல பிள்ளைகளப் பெத்தாச்சு, குறட்ட விட்டாச்சு... இதுதான் சொர்க்கம், வாழ்க்கை என்று இவங்க நினைப்பதற்கும் கனவு காண பதற்கும்..... இவங்களைப் பொறுத்தமட்டில் இது ஒன்றும் புது சமாச்சாரம் இல்லையே!

இப்படிப்பட்ட ஒரு பாமர சமூகத்தில் அன்னமேரி ஒரு புது மைப் பெண்ணாக, தன் பிள்ளை களுக்கு கல்வி அறிவைக் கொடுக்க வேண்டும், அறியாமையை விலக்க வேண்டும், நாலுபேர் மதிக்கிற மாதிரி தன் பிள்ளைகள் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும் என்று கனாக்கண்டாள், அதற்காக அவள் அதிகம் பாடுபடவேண்டி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் உதவிகளை நாடவேண்டி இருந்தது.

ஆனால் பாவம் அன்ன மேரி! எதற்காக அவள் வீட்டை விட்டு வெளியே போனாலும் கழுகுக் கண்கள் அவளைக் கௌவி எடுக்கத்தான் பார்க்கின்றன. ஏனென்றால் அவள் நடை... எடுப்பு... நளினம்... பார்வை... பேச்சு... இப்படி அவளது அனைத்து அம்சங்களும் கவர்ச்சிகரமாக அவர்களைக் சுண்டி இழுத்தது. இந்த அம்சமான கவர்ச்சிப் புயலை அம்மணமாக்கிப் பார்க்கத்தான் காமுகர்கள் துடியாய்த் துடித்தார்கள்.

அய்யாத்துரையை பல தடவைகளில் கள்ளைக் கொடுத்தே மயக்கியவர்கள் அன்னமேரிக்கு ஆசை வார்த்தை காட்டி மயக்கப் பார்த்தார்கள். இந்தச் சேட்டைகளுக்கெல்லாம் தன்னிடத்தில் இடமில்லை என்பதை பல தடவைகளில் அவள் நிரூபித்திருக்கிறாள்.


இவர்களின் இந்த நப்பாசைக்குக் காரணம் அய்யாத்துரை இவளைக் கவனிப்பது இல்லை என்பதை அவர்கள் மோப்பம் பிடித்திருந்ததுதான். தாமரை இலைமேல் நீர்போல அய்யாத்துரை தன் குடும்பத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தான். அவனுக்குத் தேவைப்பட்டதெல்லாம் காலையில் எழுந்த உடனே கோப்பியில்ல தேத்தண்ணி. பிறகு இரவையில் மாலுமிரிசோடு (மீன்குளம்பு வரட்டல்) சோறு.... அது மட்டுமா... மீன் வியாபரத்தில் யாரெல்லாம் இவனுக்கு கெடுதல் செய்தார்களோ அவர்களின் கோபத்தைத் தீர்த்துக்கொள்ள தகாத வார்த்தைகளோடு சேர்த்து நாலு அடி அடிச்சி அவளச்சந்திக்கு இழுத்துக் கத்த ஒரு பொண்டாட்டி.... இவ்வளவுக்கும்தான் அவனுக்கு குடும்பம் தேவைப் பட்டது.

கோழைத்தனமான, கையாலாகாத பல ஆண்கள் அய்யாத்துரையைப் போல்தான் இருக்கின்றார்கள். அலுவலகத்திலோ, வியாபார நிலையத்திலோ சேட்டப்பிடிச்சு இழுத்து நறுக்கென்று நாலு வார்த்தை கேட்க வக்கில்லாதவர்களும், தன்னாலேயும் முடியும் எண்டு சாதிச்சிக் காட்ட முடியாதவர்களும் தாழ்வு மனப்பான்மையினால் எல்லா விடயங்களுக்கும் பின்னுக்கே நிற்பவர்களும், பணிவு, விசுவாசம் என்பதைக் காரணம் காட்டியே முதலாளிமாருக்கும், பொஸ்மாருக்கும் மனேஜர்மாருக்கும் நசிந்து அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுகின்றவர்களும் தங்கள் வீராப்பினையும், வாய் ஜாலத்தினையும் தங்கள் மனைவி மக்கள் மேல்தான் காட்டுவார்கள், சண்டாளர்கள்!

ஏனோ தானோ என்று வாழ்க்கை நடத்தினாலும்.. வந்தான் வரத்தான்போல் நடந்து கொண்டாலும் இவளுக்கு புருஷன் இருக்குடா... என்று சொல்லவும்.... பெண்மைக்குக் களங்கமில்லாமல் பிள்ளைச் செல்வத்தையும் தந்தானே என்ற மன நிறைவோடும் அய்யாத்துரையைச் சகித்துக் கொண்டு வாழ்ந்து வந்த அன்ன மேரிக்கு அன்று அதிர்ச்சி காத்திருந்தது...!

–சா(ஜ) ஹான்–

மீண்டும் வருவான்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எப்பொழுதும் எந்த விளையாட்டிலும் பதக்கங்கள் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. அந்தவகையில் தென்னாசிய விளையாட்டிலும் அவைகளின் முக்கியத்துவம் பெரிதாகத் தோன்றின. மூன்றுவகையான உலோகங்களைப் பயன்படுத்தி தங்கம், வெள்ளி, வெண்கலம் என பதக்கங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தமாக 719 பதக்கங்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. இவ்விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மிகப் பெரும் நாடான இந்தியா வழமைபோன்று 10வது முறையாகவும் அதிகமான பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது. இந்தியா மொத்தமாக 234 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இது ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு ஆகும். ஏனைய 7 நாடுகளும் சேர்ந்து மூன்றில் இரண்டு பகுதியைத்தான் பெறமுடிந்தது. இதிலும் இலங்கையையும், பாகிஸ்தானையும் நீக்கி விட்டுப்பார்த்தால் ஏனைய நாடுகளின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதனை அவதானிக்கலாம்.

இலங்கை வீரர்கள் மொத்தமாக 178 பதக்கங்களைப் பெற்று தாய் நாட்டிற்குப் பெருமை தேடித்தந்திருக்கின்றனர். எனவே அவர்களைப் பாராட்டுவது சாலச்சிறந்தது. இது மொத்தமாக பதக்கப்பட்டியலை நோக்கும் போது இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. ஆனாலும் தங்கம் வரிசையில் பார்க்கும்போது மூன்றாவது இடத்தினையே இலங்கையால் பெறமுடிந்தது. பாகிஸ்தான் அணி இம்முறை இரண்டாவது இடத்தினைப் பெற்றது பாராட்டத்தக்க விடயமாகும். அது மொத்தமாக 158 பதக்கங்களைப் பெற்றிருந்தது. மொத்தமாகப் பார்க்கின்ற பொழுது மூன்றாம் இடத்திலேயே காணப்படுகின்றது. இலங்கை வெண்கலத்தில் முதல் இடமும், வெள்ளியில் இரண்டாம் இடமும், தங்கத்தில் மூன்றாம் இடமும் பெற்றிருக்கின்றது. பாகிஸ்தான் வீரர்கள் தங்கத்தில் இரண்டாம் இடமும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். ஏனைய நாடுகளான பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகள் ஓரிரண்டு போட்டிகளில் தங்கள் திறமைகளைக் காட்டியிருப்பதனை அவதானிக்க லாம். முதன் முதலாகப் பங்குபற்றிய ஆப்கானிஸ் தான் அணியைப் பாராட்டித்தான் ஆக வேண்டும், காரணம் 6 தங்கம் உட்பட மொத்தமாக 31 பதக்கங்களைப் பெற்றிருந்தது வியக்கத் தகுந்த விடயமாகும். இதுவரையில் நடைபெற்ற 10






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்தந்தை. யூஜின் போல் ஜொனாத்தன். (ஜொனா)

விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு கொண்ட நாடான மாலைதீவு ஒருபதக்கத்தையும் பெறாதது ஏமாற்றத்தையே தருகின்றது.

மாலைதீவைப் பொறுத்தவரை அந்தநாடு பல விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றியிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. எனினும் வீரர்கள் போதிய பயிற்சியையும், அனுபவத்தையும் கொண்டிருக்கவில்லை என்பது நிகழ்ச்சிகளைப் பார்த்தபொழுது அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. உதைப்பந்தைப் பொறுத்த வரையில் தென்னாசிய நாடுகளில் மாலைதீவு ஒரு சிறப்பான அணியாகத்தான் கணிக்கப்படுகின்றது. இம்முறை அதன் திறமைகள் ஆரம்பக் கட்டங்களில் சிறப்பாக வெளிப்பட்டபொழுதிலும் இறுதிவரை அவ்வணி பிரகாசிக்கத்தவறியிருந்ததை குறிப்பிட்டுச் சொல்லலாம். ஏனெனில் ஆரம்பப் போட்டியில் மாலைதீவு, பாகிஸ்தான் அணியை 1-0 என்ற ரீதியில் தோற்கடித்திருந்தது. மாலைதீவிடம் தோல்வியைத் தழுவிய பாகிஸ்தான் ஏனைய சுற்றுக்களில் திறமையை வெளிப்படுத்தி இறுதி ஆட்டத்தில் பலம் பொருந்திய இலங்கையைத் தோற்கடித்துத் தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது. மறுபுறத்தில் பாகிஸ்தானைத் தோற்கடித்த ஒரே ஒரு அணியான மாலைதீவினால் வெண்கலத்தைக் கூட பெற முடியாமல் போனது துரதிஷ்டவசமாகும்.

இம்முறை முதன் முதலாக படகோட்டப் போட்டி மொத்தமாக 7 பிரிவுகளில் நடத்தப்பட்டது. அதில் குறிப்பிடத்தக்கவிடயம் என்னவென்றால் எந்தப் பிரிவிலுமே இலங்கைக்குத் தங்கம் கிடைக்கவில்லை. மாறாக எல்லாப் பிரிவுகளிலும் அது வெண்கலமே பெற்றிருந்தது. இந்தியா ஏழு பிரிவுகளிலும் தங்கம் வென்றதுடன் பாகிஸ்தான் 7 பிரிவுகளிலும் வெள்ளி வென்றது குறிப்பிடத்தக்கது. இலங்கை சைக்கிள் ஓட்டப்போட்டியில் முழுவதுமாக ஆதிக்கம் செலுத்தி 'Petol விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு போனாலும் நாங்கள் சைக்கிளிலேயே ஓடிக் காலத்தைக்கழிப்போம்' என்று காட்டும் வகையில் 6 தங்கங்களை வென்றிருந்தது அவதானிக்கப்பட்ட ஒரு விடயமாகும். அதிலும் இலங்கையின் வடமேல் பகுதியைச் சேர்ந்தவர்களே ஆதிக்கம் செலுத்தியதனையும் காணக்கூடியதாக இருந்தது.

Boxing அதாவது குத்துச்சண்டைப் போட்டியில் சகல பிரிவுகளிலும் பாகிஸ்தான் ஆதிக்கம் செலுத்தி பல தங்கங்களை வென்றிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. ஒரு சில நடுவர்களின் தவறான தீர்ப்புக்களும் அவர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்ததை விளையாட்டுக்களின் பின்னர் பல்வேறு விளையாட்டு சஞ்சிகைகளின் விமர்சனங்களின் மூலம் அறியக் கூடியதாக இருந்தது. இந்தியா பூப்பந்துப் போட்டிகளில் தமது ஆதிக்கத்தை முழுமையாக செலுத்தியிருந்தது. அதில் பல தங்கங்களை இந்தியா வென்றிருந்தது.

தடகளப் போட்டிகள் எப்பொழுதும் ஒரு தனி இடத்தைப் பெறுகின்றன. காரணம் அதில்தான் அதிவேக வீரர்கள், வீராங்கனைகள் போன்றோர் வெளிப்படுத்தப்படுகின்றனர். அத்துடன் இந்தப் போட்டிகளில்தான் செக்கன்களின் மதிப்பும் உணரப்படுகின்றது. யாரும் எதிர்பாராத வகையில் ஆசிய சம்பியன் இந்திய நாட்டின் Anilஜப் புறந்தள்ளி மின்னல் வேகத்தில் ஓடி 100m ஓட்டப்போட்டியை வென்ற இலங்கை வீரர் உமங்க சுரேந்திர ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தினார். அத்துடன் அண்மையில் கட்டாரில் நடை பெறவிருக்கின்ற ஓட்டப் பந்தயங்களிலும் போட்டியிடத் தெரிவாகி இருக்கின்றார். இலங்கைக் குழுவின் தலைவர் Sprint queen என அழைக்கப்படுகின்ற சுசந்திகா ஜயசிங்க 100m/200m ஓட்டப்பந்தயங்களில் எதிர்பார்த்தது போன்று தங்கங்களை வென்றிருந்தார். இப்பந்தயங்களில் கலந்து கொண்ட கத்தோலிக்கரான றொகான் பிரதீப்குமார 400m ஓட்டத்திலும், 200m ஓட்டத்திலும் தங்கங்களை வென்று இலங்கைக்குப் பெருமை சேர்த்தார். இவ்வாறு தடகளப் போட்டிகளில் இலங்கை 15 தங்கங்களை வென்றிருந்தது. இவ்விளையாட்டுக்களில் கலந்து கொண்ட வீரர்கள் பற்றிய சர்ச்சைகள் அடுத்த இதழில் தொடரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments From**

The Only Authorized Dealer for Hero Honda, TVS, YAMAHA in Batticaloa

HERO HONDA

*Pattersons'*

*175, Trinco Road,*
*Batticaloa*
*Tel: 065 2223794 Fax: 065 2226001*

YAMAHA

*Authorized Dealer for Hero Honda, TVS, YAMAHA Sales, Service & Spare parts.*

**New TVS Exclusive Show Room**

Pattersons' TVS
290, Trinco Road,
Batticaloa
Tel: 0602651666

TVS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர்களுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி**
**15 - 11 - 2006**




# விவிலியம் கற்போம் - 51

**(விடுதலைப் பயணம் 32: 28,33:3)**
**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசேயின் வாக்குக்கிணங்க லேவியர் செயல்பட்டதால், அந்நாளில் மக்களுள் ஏறத்தாள ................................... பேர் மடிந்தனர். மோசே, "புதல்வன், சகோதரன் என்று பாராது நீங்கள் செயல்பட்டு அவருக்காக இன்று உங்களை அர்ப்பணம் செய்து கொண்டீர்கள். இதை முன்னிட்டு ........................................ உங்கள்மேல் ஆசி பொழிந்துள்ளார்" என்றார். மறுநாள் மோசே மக்களை நோக்கி, "நீங்கள் பெரும் பாவம் செய்துவிட்டீர்கள். இப்போது நான் மலைமேலேறி ஆண்டவரிடம் செல்லப் போகிறேன். அங்கே ஒருவேளை உங்கள்................................ நான் கழுவாய் செய்ய இயலும்" என்றார். அவ்வாறே மோசே ஆண்டவரிடம் திரும்பிவந்து, "ஐயோ, இம்மக்கள் தங்களுக்காகப் பொன்னால் .................................. உருவாக்கிப் பெரும்பாவம் செய்துவிட்டார்கள். இப்போதும், நீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளும். இல்லையேல், நீர் எழுதிய உம் நூலிலிருந்து என் பெயரை.................................... என்றார். ஆண்டவரோ மோசேயிடம், "எவன் எனக்கு எதிராகப் பாவம் செய்தானோ, அவனையே என் நூலிலிருந்து நீக்கி விடுவேன். நீ இப்போதே புறப்பட்டுப்போ. உன்னிடம் நான் .................................. மக்களை நடத்திச்செல். இதோ என்தூதர் உன்முன்னே செல்வார். ஆயினும் நான் தண்டனைத் தீர்ப்பு வழங்கும் நாளில் அவர்கள் பாவத்தை அவர்கள் மேலேயே ...................................." என்றார். ஆரோன் செய்த கன்றுக்குட்டி மக்களால் உருவாக்கப்பட்டதால் ஆண்டவர் அவர்கள் மேல் கொள்ளை நோயை அனுப்பினார். ஆண்டவர் ...................................... நோக்கி, "எகிப்து நாட்டிலிருந்து நீ நடத்தி வந்த மக்களுடன் இங்கிருந்து புறப்பட்டுச் செல். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் அவர்கள் ................................... தருவதாக நான் வாக்களித்த அந்த நாட்டிற்குச் செல். நான் ஒரு தூதரை உனக்குமுன் அனுப்பிக் கானானியர், எமோரியர், இத்தியர், பெரிசியர், இவ்வியர், ............................ ஆகியோரைத் துரத்திவிடுவேன். பாலும் தேனும் பொழியும் நாட்டுக்குப் போங்கள். நான் உங்களோடு வரப்போவதில்லை. ஏனெனில் நீங்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள்,ஆதலால் நான் உங்களை அழித்தொழிக்க நேரிடும்" என்றார்.

**விடைகள்: மோசேயை, எபூசியர், நீக்கிவிடும், வழிமரபினருக்கு, சுமத்துவேன், மூவாயிரம், ஆண்டவர், பாவத்திற்காக, தெய்வங்களை, கூறியுள்ளபடி.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம்- 51

(பொருத்தமான சொற்களின் கீழக் கோடிடுக)

1) அர்த்த சாஸ்திரத்தை எழுதிய ஆசிரியர்
(சேக்கிழார், கௌடிலியர், உமறுப்புலவர்)

2) ஐ.நா. அமைப்பின் தற்போதைய செயலாளர்
(கொபி அனான், ஜோர்ஜ் புஷ், ஜயந்த தனபால)

3) நமது உடலில் மிகவும் கெட்டியான தோல் எங்குள்ளது?
(கையில், பாதத்தில், தொடையில்)

4) 'சைலன்ட் கில்லர்' என்று அழைக்கப்படும் நோய்
(புற்றுநோய், நீரிழிவு, இரத்த அழுத்தம்)

5) பணம் பந்தியிலே குணம்? ..........?
(கோபுரத்திலே, குப்பையிலே, உள்ளத்திலே)

6) 'நேசம்' என்ற சொல்....
(முதல்போலி, இடைப்போலி, கடைப்போலி)

பெயர் : ........................................................................

முகவரி : ........................................................................

........................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 50**
**தொண்டன்**
**அ.பெ. எண் 44**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 50 விடைகள்

யோசுவா, பாளையத்தை, வீசிஎறிந்து, இஸ்ராயேல், ஆரோன், தெய்வங்களை, பொன், கட்டுப்பாடின்றி, ஆண்டவரது, இடையில்

## அறிவை வளர்ப்போம் - 50 விடைகள்

1. அப்துல்கலாம்
2. பாரதியார்
3. லூமியர் சகோதரர்கள்
4. பி.ரி.ஜ
5. பி.பி.சி 6.1925

(*இரண்டு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை ஒருவர் மட்டுமே எழுதிப் பரிசு பெறுகிறார்)

- C. டென்சியா சஜித்திரா
  46/75 பாரதி வீதி
  மட்டக்களப்பு

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்துப் பரிசு பெறுவோர்.**

- T.R. அனோஜன்
  குருமட வீதி
  திருப்பெருந்துறை
  மட்டக்களப்பு

- R. டிலுஸ்கரன்
  இல : 03, பேர்னான்டோ வீதி
  மட்டக்களப்பு

**பாராட்டுப் பெறுவோர்**

- அ. கோபினா
  ஓசானா இல்லம்
  சத்துருக் கொண்டான்
  மட்டக்களப்பு

- S.சந்துரு
  செங்குந்தர் வீதி
  ஆரையம்பதி - 2

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registeredasa News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## நவம்பர் ~ 2006

**கத்தோலிக்க நற்சிந்தனை – நேரம் காலை 6.10 மணி.**

நாள்:- 01, 02, 03 - அருள் தந்தை மதுராங்கன்குரூஸ்

11, 12, 13, 14- திருமதி. ஜெயரஞ்சிவாஸ்

15, 16, 17 - அருள் சகோதரி சலோமி மொறாயஸ்

25, 26, 27, 28- அருள் தந்தை பிரைனர் செலர்

29, 30, 12, 01- அருள் தந்தை றொஹான் பேனாட்

**சிறுவர் உலகம் – நேரம் மாலை 6.30 மணி**

நாள்:- 07 - விவிலியக்கதை வினா விடைப்போட்டி

- நடத்துபவர் பாரதிப்பிரியா

21 - கதையும் கருத்தும்

**புதிய உலகம் – நேரம் மாலை 6.30 மணி**

நாள்:- 05 - வழிபாடு, செய்திகள்,

போட்டி, பாடல்கள் இன்னும்...

19 - உரையாடல், செய்திகள், அறிவிப்புக்கள்,

பாடல்கள், இன்னும்...

நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org